விலை : 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 01 வியாழக்கிழமை (18.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303

டிஷ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
(C4112)
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160

## அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில்
# ஜனாதிபதியுடனான நேற்றைய சந்திப்பு பயனளிக்கவில்லை
## அடுத்த வாரம் மீண்டும் பேசலாம் என கூட்டமைப்பினரிடம் மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு) தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான நேற்றைய சந்திப்பு பயனளிக்கவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. எனினும் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் பிரதமர், நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரையும் அழைத்து கூட்டமைப்புடன் அடுத்த வாரம் முக்கிய பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் வடக்கில் ஒரு பகுதி காணி விரைவில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்கில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களின் காணிகள் ஒரு பகுதி விரைவில் விடுவிக்கப்படவுள்ளது.

விமான நிலைய ஓடுபாதை அண்மையில் ஜே/238 02

## அரச வங்கிகளின் பணிப்பாளர் சபையை
### கலைக்க ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)
இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் முதலீட்டுச் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளை நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வரும் வகையில் கலைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். 02

## ஜனாதிபதி மைத்திரி - பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடல்
### அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் நட்பு ரீதியில் கலந்துரையாடல்



(கொழும்பு)
இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற் 23

## வடக்கு மாகாணத்துக்கு கீதம் 23ஆம் திகதி இறுதி அமர்வில் அங்கீகரிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)
வடமாகாண சபையின் அடுத்த அமர்வும் இறுதி அமர்வும் எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதன்போது சபையின் அங்கீகாரத்துடன் மாகாண கீதம் முன்வைக்கப்படவுள்ளது.

ஈழத்தின் மூத்த இசையமைப்பாளர் கண்ணன் இதற்கு 23

## உருக்குலைந்த நிலையில் திருநெல்வேலியில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி பகுதியில் தனிமையில் வசித்து வந்த ஆண் ஒருவர் உருக்குலைந்த நிலையில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 23

## குற்றமிழைத்த இராணுவத்தினர் பதவி, தராதரம் பாராது தூக்கிலிடப்படுவார்கள்



### அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)
குற்றமிழைத்த இராணுவத்தினர் பதவி, தராதரம் பாராது தூக்கிலிடப்படுவார்கள் என அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தாஜுதீன் மற்றும் லசந்த கொலையாளிகள், பிரகீத் எக்னெலியகொடவைக் கடத்தியவர்கள் என 23

## வர்த்தக மத்திய நிலையம் யாழில் அமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)
வர்த்தக மத்திய நிலையம் ஒன்று இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அமைப்பதற்காக அபி 24



## வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பொதுமக்களின் காணியை விடுவிக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)
இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட காணிகளில் 78 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மோதல் நிலவிய காலப் பகுதியில் முப்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட தனியார் காணிகளை காணி உரிமையாளர்களுக்கு விடுவிப்பதற்கான பணி 23

## அரசியல் கைதிகளுக்கான பொதுமன்னிப்பு தொடர்பில் ஆராய்கிறதாம் அரசாங்கம்

(கொழும்பு)
அரசியல் கைதிகளில் யாருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது மற்றும் விடுதலை செய்வது என்பது குறித்து அரசாங்கம் தற்போது கலந்தாலோசித்து வருவதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று அரசாங்கதகவல்திணைக்களத்தில் இடம் பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த வாரம் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து நான் 23

## 28 ஆயிரம் குடும்பங்களுக்கு வடக்கு, கிழக்கில் வீடுகள் அமைக்க அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)
வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா 12 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 65 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் முதல் கட்டமாக 28 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த வீடுகளை அமைக்கும் பணிக்கான உடன்படிக் 02

## வயல் பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)
வயல் பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 24

## றோ சதித்திட்டம் தீட்டியதாக மைத்திரி கருத்து தெரிவிக்கவில்லை
### ஜனாதிபதி ஊடக பிரிவு விளக்கம்

(கொழும்பு)
தன்னை கொலை செய்ய எந்தவொரு இந்திய உளவுத்துறையும் திட்டம் தீட்டியதாக ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கவில்லை என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச் 23

### பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில்

# ஜனாதிபதி மைத்திரி தலைமையில் அமைச்சரவை ஆலோசனைக் கூட்டம்

(கொழும்பு)

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவை ஆலோசனைக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று பிற்பகல் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவை ஆலோசனைக் குழு கூட்டம் நான்கு வருடங்களுக்கு பின்னர் நேற்று இடம்பெற்றதுடன், ஆளும்கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இதன்போது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், அமைச்சுடன் தொடர்பிலான விடயங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் மகிந்த சமரசிங்க, தயாசிறி ஜயசேகர, திலங்க சுமதிபால, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை சேர்ந்த விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, மகிந்த யாப்பா அபேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த மகிந்த திசாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க, எஸ்.எம்.மரிக்கார் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

### கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது

# 24 மணிநேரத்திற்குள் நடந்ததை வெளிப்படுத்திய அமைச்சர் ராஜித

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னை அழைத்து பொதுவேட்பாளராக களமிறங்குமாறு கேட்டுக் கொண்டார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எனினும் சற்று பொறுங்கள். 24 மணித்தியாலங்களுக்கு நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து முக்கியமான நபரை அழைத்து வருகின்றேன் என பிரதமரிடம் கூறினேன்.

இதன் அடிப்படையிலேயே நானும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அன்று கட்சியில் இருந்து வெளியேறினோம் என்று அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார். (ம)

### அரச வங்கிகளின்...

அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தனித்தனியாக விசாரணைகளை முன்னெடுக்கும் வகையிலேயே அவர் இந்தக் கட்டளையை வழங்கினார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதாரச் சபையின் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிலையில் நேற்று இந்த உத்தரவை அவர் வழங்கியுள்ளார். (ம)

### ஒரு பகுதி காணி...

கிராம சேவையாளர் பிரிவு கட்டுவன் காசிஅம்மன் கோயில் பக்கமுள்ள மக்களின் காணி உரிமையாளர்கள் தங்கள் காணி உறுதி பிரதி, அடையாள அட்டை பிரதி, குடும்ப பங்கீட்டு அட்டை பிரதி என்பவற்றை கட்டுவன் ஊரங்குனை ஜே/238 கிராமசேவையாளரிடம் கொடுத்து பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாற ஆரம்பத்தில் முன்னர் இவற்றினை கொடுக்காது பதிந்தவர்களும் மீள இவற்றை கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வியாழக்கிழமை முதல் ஒரு வாரத்துக்குள் (கூடியவிரைவில்) பதிவினை மேற்கொள்ளுமாறு கிராமசேவையாளர் அறிவித்துள்ளார். (ம-9)

### வடக்கு, கிழக்கில் வீடுகள்...

கையை இந்திய நிறுவனமான என்டி என்டர்பிரைஸ் மற்றும் இலங்கை நிறுவனங்களான யாப்பா டெவலோபர்ஸ், ஆர்சேடியம் பிறைவேற் லிமிட்டட் ஆகிய நிறுவனங்களிடம் வழங்க வடக்கு அபிவிருத்தி அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முன்வைத்த ஆவணத்துக்கே அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்தவர்களுக்காக வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் 65 ஆயிரம் வீடுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக 28 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கையை தெரிவு செய்யப்பட்ட 3 நிறுவனங்களிடம் வழங்க அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் குழுவால் அனுமதியளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு **021 221 7603, 021 567 1532**

## பகிரங்க ஏல விற்பனை
### மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**காலம்:**-24.10.2018 மு.ப 9.00 மணி

**இடம்:**-மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றில்

**ஏலத்தில் விடப்படவுள்ள பொருட்கள்:**-விறகு பலகைகள், பழைய ஓடுகள், பழைய இரும்புகள்.

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் 23.10.2018ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பெறுநர் குழு**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.**

(சி-4173)

## யா/நடேஸ்வரக் கல்லூரி
### காங்கேசன்துறை

**தரம் 6 மாணவர்களுக்கான அனுமதிகள்**

எமது கல்லூரியில் தரம் 6 (2019) மாணவர்களுக்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பபடிவங்களை 19.10.2018 முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவு திகதி:-09.11.2018**

(6107)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**மணிவண்ணன் தட்சாயினி**

2018ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவி மணிவண்ணன் தட்சாயினி 171 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையை பாராட்டி வாழ்த்துவதோடு 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற 31 மாணவர்களையும் அவர்களின் வெற்றிக்கு வழிசமைத்த பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகத்தினர்**
**கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயம்**

(C-4172)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கல்லூரி வீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த றொபின்-பிருந்தா தம்பதியினரின் புதல்வன்

**றொபின் தினுஸ்ரன்**

யா/வட இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று 2018ஆம் ஆண்டு தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். அவர் மேலும் பல சிறப்புகளைப் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அத்தை, சித்தாமார், சித்திமார்.

(C-4170)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்

**பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**

20.10.2018, 21.10.2018 (சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் பிரம்மஞானம் மற்றும் ஆசிரியர் பயிற்சி நடைபெறும்.

**20.10.2018 அன்று**

காலை 7.00 மணிக்கு இறைவணக்கம், குருவணக்கம், தவம்
காலை 7.15 மணிக்கு உடற்பயிற்சி-பேராசிரியர் அருள்நிதி V.பாஸ்கரன் அவர்கள்
வரவேற்புரை-துணைப்பேராசிரியர் அருள்நிதி T.நந்தகுமரன் அவர்கள்.
தலைமையுரை-பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்

**20.10.2018 மற்றும் 21.10.2018 அன்று**

பிரம்மநிலை விளக்கம், வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம், தன்மாற்றம், இயல்பூக்கம், கூர்தலறம், வான்காந்தத் தத்துவம் உயிரினத்தன்மாற்றம், கருமையம், கர்மயோக நெறி போன்றவற்றின் விஞ்ஞான ரீதியான விளக்கத்திற்கு
முதுநிலைப் பேராசிரியர்கள்:அருள்நிதி R.ஜெயபால் மற்றும்
அருள்நிதி குமார அழகப்பன் ஆகியோர் வருகை தரவுள்ளனர். எனவே 3ம் நிலை அகத்தாய்வு முடித்த அனைத்து அன்பர்களும் கலந்து கொள்ளவும் மற்றும் ஏற்கனவே பிரம்மஞான பயிற்சி எடுத்தவர்களுக்கு சலுகை அடிப்படையில் பயிற்சி வழங்கப்படும்.

மற்றும்

**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சொற்பொழிவு நிகழ்வு**

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலின் 2ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 28.10.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

**காலை நிகழ்வு:-**
- சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள்-முயற்சிகள் தவறலாம் முயன்றிட தவறலாமா?
- முதுநிலைப் பேராசிரியர் R.ஜெயபால் அவர்கள்-இயங்காமனம்
- பேராசிரியர் குமார அழகப்பன் அவர்கள்-உலக அமைதிக்கு வேதாத்திரியம்

**மாலை நிகழ்வு**
- சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள்-அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்
- முதுநிலைப் பேராசிரியர் R.ஜெயபால் அவர்கள்-அவிழும் முடிச்சு என்ற தலைப்புக்களில் உரையாற்றவுள்ளனர்.

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-4169)

தொடர்ந்து ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் முதுநிலைப் பேராசிரியர் அருள்நிதி குமார அழகப்பன் அவர்களால் 20.10.2018 சனிக்கிழமை தொடக்கம் 26.10.2018 வெள்ளிக்கிழமை வரை மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை நடாத்தப்படும்

மனவளக்கலைப் பயிற்சிகளைப் பயின்று பயன் பெறுவதோடு அறிவுத்திருக்கோவில் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில், இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:0212222772**

# என்னைக் கொல்ல 'றோ' சதித்திட்டம்!

## அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் முன் ஜனாதிபதி மைத்திரி பரபரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இந்தியப் புலனாய்வுப் பிரிவான றோ தன்னைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.**

அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் ஒருவரை ஆதாரம் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தப் படுகொலைச் சதிக்குப் பின்னால், இந்தியாவின் றோ புலனாய்வுப் பிரிவே இருந்தது என ஜனாதிபதி தெரிவித்தார் என்று தனது பெயரை வெளியிட விரும்பாத அமைச்சர் ஒருவர், ECONOMY NEXT ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த சதித் திட்டம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்தும் விசாரணையையிட்டு தாம் மகிழ்ச்சியடையவில்லை என்றும், விசாரணைகள் மெதுவாகவே முன்னெடுக்கப்படுவதாகவும், சட்டம் ஒழுங்கு அமைச்சரைப் பார்த்து ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் அசாதாரணமான உறுதியுடன் இருந்தார் என்றும், தனது அரசாங்கம் மீது ஜனாதிபதி கூறிய குற்றச்சாட்டுக்களையிட்டு அவர் அதிருப்தியுடன் காணப்பட்டார் என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



இந்தியப் புலனாய்வுப் பிரிவு மீது குற்றம்சாட்டிய ஜனாதிபதி மேலதிக விபரங்கள் எதையும் வெளியிடவில்லை என்று தெரிவித்த அமைச்சரவை வட்டாரங்கள் ஜனாதிபதியின் இந்தக் குற்றச்சாட்டினால் அமைச்சர்கள் அதிர்ச்சியுடன் காணப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளது.

அவர் தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரம் எதையும் வழங்காததால் அதன் மீது அக்கறை கொள்ள வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன் என அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

அதேவேளை, படுகொலைச்சதி தொடர்பான விபரங்களை வெளியிட நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஒரு செய்தியாளர் சந் திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

எனினும் கடைசி நேரத்தில் அது நிறுத்தப் பட்டது. அந்த செய்தியாளர் சந்திப்பை ஜனாதிபதியின் முன்னாள் இணைப்பு அதிகாரியும், தற்போதைய மூத்த ஆலோசகருமான சிறிலால் லக்திலக நடத்த திட்டமிடப்பட்டிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், இந்திய புலனாய்வுப் பிரிவான றோ மீது ஜனாதிபதி சுமத்தியுள்ள குற்றச்சாட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

### மைத்திரியைக் கொல்ல 'றோ' சதித்திட்டம்

# இந்திய-இலங்கை உறவை தீவிரமாக பாதிக்கக்கூடிய ஒரு நடவடிக்கை

## த ஹிந்து சுட்டிக்காட்டு

(டில்லி)

தன்னைக் கொல்ல இந்தியப் புலனாய்வுப் பிரிவான றோ, சதித் திட்டம் தீட்டியுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ள குற்றச்சாட்டு, இந்திய-இலங்கை உறவுகளை தீவிரமாக பாதிக்கக் கூடிய ஒரு நடவடிக்கையாக இருக்கும் என்று இந்தியாவில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழான 'த ஹிந்து' தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நடந்த வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றிய போது, இந்தியப் புலனாய்வுப் பிரிவு தன்னைக் கொல்ல முயற்சிப்பதாக, தனது அமைச்சர்களிடம் கூறியுள்ளார்.

ஆனால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இது தெரியாமல் இருக்கக் கூடும் என்றும் அவர் கூறினார் என, அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றவர்களின் வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

"கைது செய்யப்பட்ட இந்தியர், என்னைக் கொல்ல முயற்சிக்கும் றோவின் முகவராக இருக்க வேண்டும். இதனை இந்தியப் பிரதமர் அறியாமல் இருக்கலாம். இது பெரும்பாலும் வழக்கம் தான். சி.ஐ.ஏயின் இதுபோன்ற நடவடிக்கைகள் ட்ரம்ப்புக்கும் தெரியாமல் இருக்கலாம்" என்று ஜனாதிபதி உரையாற்றியிருந்தார். அவர் அப்படிக் கூறியது எமக்கு அதிர்ச்சியை ஏற்படு த்தியது என்று, தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத ஒருவர் தெரிவித்தார்.

இதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்ட போது, இது பற்றி ஆராய்ந்து பதிலளிப்பதாக கூறினார்.

எனினும், இதுவரை அவரிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டில்லிக்குப் பயணம் மேற்கொள்வதற்கு- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்துப் பேசுவதற்கு சில நாட்கள் முன்னதாக, ஜனாதிபதி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார்.

எனினும் இந்தியப் புலனாய்வுப் பிரிவு மீது இலங்கை ஜனாதிபதி ஒருவர் குற்றச்சாட்டை முன்வைப்பது இது முதல் முறையல்ல. 2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், மகிந்த ராஜபக்ஷவும், தனது தோல்விக்கு இந்தியப் புலனாய்வுப் பிரிவான றோ தான் காரணம் என்று குற்றம்சாட்டியிருந்தார் எனவும் த ஹிந்து மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் 30 தொன் போதைப்பொருள் மீட்பு

## 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியாம்

(கொழும்பு)

கடந்த ஐந்து மாத காலப்பகுதிக் குள் மாத்திரம் இந்து சமுத்திரத்தின் ஊடாக கடத்திச் செல்ல முற்பட்ட 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 30 தொன் போதைப் பொருட்களை கைப்பற்றியுள்ளது டன் இதற்கு பயன்படுத்தப்பட்ட 13 படகுகளையும் கைப்பற்றியுள்ளதாக இலங்கை கடற்படையின் பிரதம அதிகாரி ரியர் அட்மிரல் பியால் த சில்வா தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தில் ஒன்றிணைந்த கடல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு கடற்படையினர் இவற்றை கைப் பற்றியதாக அவர் தெரிவித்தார்.

ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதிக்குள் இந்து சமுத்திரத்தின் வடபிராந்தியத்தை அண்மித்த நாடுகளைச் சேர்ந்த கடற்ப டையினர் மேற்கொண்ட மேற்படி ஒன்றிணைந்த நடவடிக்கைகளின் மூலம் இலங்கை போன்ற நாடுகளுக்கு ஏற்படவிருந்த பாரிய பாதிப்பு க்களை தவிர்க்க முடிந்துள்ளதுடன் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளும் முறியடிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்தார்.

வெளிநாட்டு கடற் படையினரால் இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களில் 28.5 தொன் ஹஷீஸ் ரகபோதைப்பொருளும்2 தொன் ஹெரோயினும் அடங்குவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கை கடற்படை 9 ஆவது வருடம் நடத்தவுள்ள காலி பேச்சு வார்த்தை "கோல் டயலோக்" சர்வதேச கடல்சார் பாதுகாப்பு மாநாடு இம்மாதம் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு கொழும்பு கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

### ஜனாதிபதி கொலைச்சதி விவகாரம்

# பிரதிப்பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா பதவி நீக்கம்



(கொழும்பு)

பொலிஸ் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை பதவியிலிருந்து நீக்குவதற்கு சட்டம்மற்றும்ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பிலான பரிந்துரை அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்னவின் கையெழுத்துடன் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியமை தொடர்பில் இடம் பெற்றுவரும் விசாரணைகளில் இதுவரையான தகவல்களுக்கு இணங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** ஆடம்பரப்பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உற்சாகமான நாள்.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** நட்பு பகையாகாதிருக்க விழிப்புணர்வு இவசியம், உடல் நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**கும்பம்:** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், பணப்பற்றாக்குறை ஏற்படலாம், ஒரு வேலையை முடிக்க சற்று அலையும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கடகம்:** புதிய பொருட்சேர்க்கையுண்டு, எண்ணியது நிறைவேறும் நாள், முன்னேற்றம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்:** மன அமைதி வேண்டி வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார நலன்கருதி புதியவர்களை சந்திக்க முனைவீர்கள், திடீர் பயணம் செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், நன்மைகள் நாடிவரும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**இராசி பலன்**

கிரகநிலை

ராகு
செவ். சந். கேது
சனி
குரு
சுக் புத
சூரி.

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்

**18.10.2018**

ஐப்பசி 01, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 06.02 மணிக்கு

தசமி பிற்பகல் 3.55 மணிவரை

திருவோணம் பின்னிரவு 1.35மணிவரை

சுபநேரம் 7.32-9.02 மணிவரை

இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

மகாநவமி விரதம்

வளவன்

**தனுசு:** சுப செய்திகள் வந்து சேரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை கூடும்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**கன்னி:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# பாகிஸ்தான் வலுவான முன்னிலை

## அபாஸ், பகர் ஜமான்அசத்தல்



2ஆவது இன்னிங்ஸிலும் அரைச்சதம் அடித்த பகர் ஜமன்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அபு தாபி டெஸ்டில் அபாஸ் (5 விக்.,), பகர் ஜமான் (66 ஓட்.,) அசத்த பாகிஸ்தான் அணி வலுவான முன்னிலை பெற்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஷில் பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன. இரு அணிகளுக்கும் இடையில் டுபாயில் நடந்த முதல் போட்டி சமனிலையான நிலையில், இரண்டாவது டெஸ்ட் அபு தாபியில் நடைபெறுகிறது.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 282 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்ட நேர நிறைவில், 2 விக்கெட்டுக்களை இழந்து 20 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**அபாஸ் அபாரம்**

நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தானின் மொஹமட் அபாஸ் 'வேகத்தில்' ஜொலித்தார்.

இவரது பந்துவீச்சில் ஷோன் மார்ஷ் (3), ரிராவிஸ் ஹெட் (14) சிக்கினர். பின்ச் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். யாசிர் ஷா 'சுழலில்' மிட்சல் மார்ஷ் (13) ஆட்டமிழந்தார். ஸ்டார்க்கை (34) வெளியேற்றிய அபாஸ், டெஸ்டில் தனது 3ஆவது ஐந்து விக்கெட் பெறுதியைக் கைப்பற்றியதுடன் டெஸ்டில் தனது சிறந்த பந்துவீச்சு பெறுதியையும் ப்திவு செய்தார்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 145 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் அதிகபட்சமாக அபாஸ் 33 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**பகர் அரைச்சதம்**

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு ஹபீஸ் (6) ஏமாற்றினார்.

பகர் ஜமான், அசார் அலி இணைந்து சிறப்பாக விளையாடினர்.

இரண்டாவது விக்கெட்டுக்காக 91 ஓட்டங்கள் எடுத்தபோது, பகர் (66) அரைச்சதம் அடித்து ஆட்டமிழந்தார். தன் பங்கிற்கு அசார் அலியும் அரைச்சதம் கடந்து அணிக்கு வலுச் சேர்த்தார்.

இந்நிலையில் நேற்றைய 2ஆம் நாளாட்டம் நிறைவுக்கு வந்தபோது, பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்கள் எடுத்து, 281 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் அசார் அலி (54), ஹரிஸ் சொகைல் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



5 விக்கெட்டுக்களை கைப்பற்றி ஆஸிக்கு பலத்த அடி கொடுத்த மொஹமட் அபாஸ்

# உமேஷ் பக்கம் அதிர்ஷ்டம்

## ஆஸி தொடரில் வருமா வாய்ப்பு?

சொந்தமண்ணில் சிறப்பாக செயற்படும் உமேஷ் யாதவுக்கு அந்நிய மண்ணில் போதிய வாய்ப்பு கிடைப்பது இல்லை. இந்தக் குறை அவுஸ்திரேலிய தொடரில் நீங்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ், (வயது-30), இதுவரை 40 டெஸ்டில் 117 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். 2016-17 சீசன் மற்றும் இலங்கை தொடர்களில் ஆடுகளங்கள் வேகத்துக்கு கைகொடுக்காத போதும் 18 டெஸ்டில் 45 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

கடைசியாக இந்திய அணி சொந்தமண்ணில் பங்கேற்ற 18 டெஸ்டில் 17ல் களமிறங்கினார். இருப்பினும் அந்நிய மண் என்று வந்து விட்டால் இவருக்கு போதிய வாய்ப்பு கொடுக்கப்படுவது இல்லை.

**யாருக்கு முன்னுரிமை**

இஷாந்த் சர்மா, மொஹமட் ஷமி, புவனேஷ்வர் சமீபத்தில் பும்ரா என பலருக்கும் முன்னுரிமை கொடுக்கின்றனர். கடந்த தென்னாபிரிக்கா, இங்கிலாந்து தொடரில் இடம்பெற்ற போதும், மூன்றாவது வேகப்பந்து வீச்சாளர் இடத்தில் பாண்ட்யா வந்ததால் களமிறங்க முடியாமல் தவித்தார்.

சமீபத்திய இங்கிலாந்து தொடர் முதல் டெஸ்டில் (பேர்மிங்காம்) 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பின் வாய்ப்பு கிடைக்கவில்லை.

**மீண்டும் அபாரம்**

சமீபத்திய மே.தீவுகள் தொடரில் மொஹமட் ஷமி, பும்ரா, புவனேஷ்வர் உள்ளிட்டோருக்கு ஓய்வு கொடுக்கப்பட உமேஷ் களமிறங்கினார். போட்டி ஆரம்பித்த சிறிது நேரத்தில் அறிமுக வீரர் ஷர்துல் தாகூர் காயத்தால் கிளம்ப ஒட்டு மொத்த பொறுப்பும் உமேஷ் மீது விழுந்தது.

மனம் தளராமல் போராடிய உமேஷ், கபில் தேவ் (1980, 1983), ஸ்ரீநாத்துக்குப் (1999) பின் ஒரு டெஸ்டில் 10 விக்கெட் (6+4) சாய்த்த மூன்றாவது இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஆனார்.

சற்றும் உதவாத ஆடுகளத்தில் கூட, எந்த இடத்தில் பந்தை 'பிட்ச்' செய்தால் சரியாகச் செல்லும் என நன்கு தெரிந்து வைத்துள்ளார். தொடர்ந்து 145 கி.மீ., வேகத்தில் பந்து வீசுகிறார்.

**இவர் 'நம்பர் 1'**

தற்போதுள்ள பந்துவீச்சாளர்களில் குறைந்தது 15 விக்கெட்டுக்கள் சாய்த்து, குறைவான 'ஸ்டிரைக் ரேட்' (29.9) வைத்துள்ளவர்களில் உமேஷ்தான் 'ரொப்' லிஸ்டில் உள்ளார்.

அடுத்த இடத்தில் உள்ள இந்திய பந்துவீச்சாளர் இஷாந்த் சர்மா (46.4) அதிக வித்தியாசத்தில் பின்தங்கி உள்ளார்.

இந்த ஆண்டு பங்கேற்ற 4 டெஸ்டில் 18 விக்கெட் சாய்த்த இவரது விக்கெட் சராசரி 16.05 ஆக உள்ளது.

இதனால் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலியா செல்லும் இந்திய அணியில் உமேஷ் யாதவ் பக்கம் அதிர்ஷ்டம் அடிக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.



**7 டெஸ்ட், 25 விக்,**

அந்நிய மண்ணில் உமேஷ் யாதவ் முதன் முதலாக அவுஸ்திரேலிய தொடரில் தான் களமிறங்கினார். இங்கு 2011-12, 2014 என இரு தொடர்களில் பங்கேற்ற இவர் 7 டெஸ்டில் 25 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். 2012ல் நடந்த பெர்த் டெஸ்டில் 93 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் சாய்த்தார்.

உமேஷ் யாதவ்

**ஒரு நாள் அணியில்**

மே.தீவுகளுடனான ஒரு நாள் தொடருக்கான இந்திய அணியில் ஷர்துல் தாகூர் இடம்பெற்றிருந்தார். இவருக்கு காயம் ஏற்பட, தற்போது ஒரு நாள் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதில் முதல் இரு ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணியில் உமேஷ் யாதவ் சேர்க்கப்பட்டுள்ளார்.

# லீவிஸ் விலகல்

## சிக்கலில் மே.தீவு.,



எவின் லீவிஸ்

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள், 'ரி20' தொடரில் இருந்து மே.தீவுகளின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் எவின் லீவிஸ் விலகியுள்ளார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மே.தீவுகள் அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி கவுகாத்தியில் ஆரம்பமாகிறது. இதற்கான மே.தீவுகள் அணியில் எவின் லீவிஸ் இடம்பெற்றிருந்தார்.

சமீபத்தில் மே.தீவுகள் கிரிக்கெட் சபையுடன் சம்பள ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்தார். தற்போது இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் மற்றும் 'ரி20' தொடரில் இருந்து விலகினார்.

இதற்குப் பதில் 'சீனியர்' கெய்ல் போல, பல்வேறு நாடுகளில் நடக்கும் 'ரி20' லீக் தொடரில் பங்கேற்க முடிவு செய்துள்ளார். இந்தியாவுக்கு எதிராக இரண்டு 'ரி20' சதம் அடித்த இவர் இல்லாதது மே.தீவுகள் அணிக்கு பெரிய இழப்புதான். இவருக்குப் பதில் கிரன் பவெல் (ஒருநாள்), நிகோலஸ் பூரன் ('ரி20') சேர்க்கப்பட்டுள்ளனர்.

# போல்ட்டுக்கு மவுசு



உசைன் போல்ட்

ஜமைக்கா முன்னாள் தடகள வீரர் போல்ட்டிற்கு மால்டா நாட்டின் கழக அணியிலிருந்து அழைப்பு வந்துள்ளது.

உலகின் 'மின்னல்' மனிதன் என புகழப்படுபவர் உசைன் போல்ட், 32. ஜமைக்கா தடகள வீரரான இவர், 100 மற்றும் 200 மீ., ஓட்டத்தில் உலக சாதனை படைத்தவர். தடகளத்திலிருந்து ஓய்வு பெற்றபின், தற்போது கால் பந்தில் கவனம் செலுத்தி வருகிறார்.

ஆஸி 'ஏ லீக் தொடரில் பங்கேற்கும் சென்ட்ரல் கோஸ்ட் மரைனர்ஸ் கழக அணியில் இணைந்தார். சமீபத்தில், சவுத் வெஸ்ட் யுனைடெட்டுக்கு எதிரான நட்பு போட்டியில் இரண்டு கோல் அடித்தார்.

இந்நிலையில், ஐரோப்பாவின் மால்டா நாட்டை சேர்ந்த வாலெட்டே கழக அணியிலிருந்து போல்டிற்கு அழைப்பு வந்துள்ளது. இது குறித்து சிட்னியிலிருந்து வெளிவரும் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகை வெளியிட்ட செய்தியில்,' வாலெட்டே கால்பந்து கழக அணி விரைவில் போல்ட்டை இரண்டு ஆண்டிற்கு ஒப்பந்தம் செய்யலாம்,' என குறிப்பிட்டுள்ளது.

# கொடுப்பனவுகளில் புரட்சியொன்று அறிமுகமாகின்றது





LANKAQR





## இலங்கையின் தேசிய QR குறியீடு

உங்களது அனைத்துக் கொடுப்பனவுகளையும் வேகமாகவும் சௌகரிமாகவும் செய்துகொள்வதற்கு

உங்களது கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவுச் செயலியில் இருந்து LANKAQR குறியீட்டினை ஸ்கேன் செய்வதன் மூலம் LANKAQR குறியீட்டுக் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்கின்ற எந்தவொரு வர்த்தகர்களுக்கும் உங்களது கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்

**வாடிக்கையாளர்களையும் வர்த்தகங்களையும் இணைக்கின்றது**

**வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்**

- கொடுக்கல்வாங்கல் செலவில்லை
- பணம் கொண்டுசெல்லத் தேவையில்லை
- உடனடிக் கொடுப்பனவு விழிப்பூட்டல்
- எந்தவொரு பொருள் அல்லது சேவையினையும் கொள்வனவு செய்யலாம்

**வணிகர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்**

- குறைந்த நிறுவுதல் செலவு
- குறைந்த கொடுக்கல்வாங்கல் செலவுகள்
- பராமரிப்புச் செலவில்லை
- கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமை பற்றிய உடனடி விழிப்பூட்டல்

இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் மற்றுமொரு டிஜிட்டல் கொடுப்பனவு முயற்சி

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
0112477642

பாதுகாப்புமிக்க, விரைவான டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்கப்படுத்தல்.

# இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் கடந்த 15.09.2018 அன்று நடத்தப்பட்ட சமுர்த்தி செக்குழு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக சமுர்த்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பெறுபேற்றின் அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச சிறுவர்கள் அதிகமான போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளனர்.

சிறுவர்களுக்கான 7-10 வயதுக்குட்பட்டவர்கள் கீழ்ப் பிரிவு, 11-14 வயதுக்குட்பட்டவர்கள் மத்திய பிரிவு, 15-18 வயதுக்குட்பட்டவர்கள் மேற்பிரிவு என வகைப்படுத்தப்பட்டு சாதாரண பாடல், பேச்சு, ஓவியம், கிராமியப்பாடல், சிறுவர் கதை, அறிவிப்பாளர், கிராமிய நடனம், சிறுவர் நாடகம், செய்யுள், உறையுள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்கள் இம்மாத இறுதியில் தேசிய ரீதியாக நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட போட்டி முடிவுகள் வருமாறு.

சாதாரண பாடல்- கீழ்ப்பிரிவு - முதலாமிடம் லி.சந்தோஷி (சண்டிலிப்பாய்), இரண்டாமிடம் கி.டிலக்ஷன் (தெல்லிப்பழை), மூன்றாமிடம் பி.பிரணிகா (கோப்பாய்), மத்திய பிரிவு முதலாமிடம் ம.மதுவந்தி (தெல்லிப்பழை), இரண்டாமிடம் ஆ.அரிகரன் (காரைநகர்), மூன்றாமிடம் கி.தனுசன் (கோப்பாய்), மேற்பிரிவு- முதலாமிடம் தெ.சோபர்ணா (தெல்லிப்பழை), இரண்டாமிடம் ஆ.அமிர்தா (காரைநகர்), மூன்றாமிடம் சி.கேசிகா (தெல்லிப்பழை), பேச்சு - கீழ்பிரிவு - முதலாமிடம் பி.ஆதிரை (தெல்லிப்பழை), இரண்டாமிடம் மு.கஸ்மிகா (சங்கானை), மூன்றாமிடம் சு.கிருஷ்ணிகா (பருத்தித்துறை), மத்தியபிரிவு - முதலாமிடம் ம.எலக்ஸ்ரின்ராஜ் (தெல்லிப்பழை), இரண்டாமிடம் அ.அபினாஸ் (மருதங்கேணி), மூன்றாமிடம் தி.சானுசா (பருத்தித்துறை), மேற்பிரிவு - முதலாமிடம் சி.மிதுஷன் (கரவெட்டி), இரண்டாமிடம் சி.சுலக்ஷினி (சண்டிலிப்பாய்), மூன்றாமிடம் உ.கிபிஷா (தெல்லிப்பழை), ஓவியம் - கீழ்ப்பிரிவு - முதலாமிடம் சு.ஜனிசா (சங்காணை), இரண்டாமிடம் ஜெ.சியோனிற்றா (பருத்தித்துறை), மூன்றாமிடம் ஜெ.அஜித்ரா (கரவெட்டி), மத்தியபிரிவு - முதலா.மிடம் சு.ஜஸ்ரின்ராஜ் (காரைநகர்), இரண்டாமிடம் அ.நித்திலா (நல்லூர்), மூன்றாமிடம் ரா.பிரதீசன் (சண்டிலிப்பாய்), மேற்பிரிவு - முதலாமிடம் வி.நிரோசன் (கோப்பாய்), இரண்டாமிடம் தே.சோபிகா (காரைநகர்), மூன்றாமிடம் ஆ.விஸ்னுதரன் (பருத்தித்துறை), கிராமியப்பாடல் - கீழ்ப்பிரிவு - முதலாமிடம், யோ.தேவகீர்த்தனா (சங்காணை), இரண்டாமிடம் ந.அபிசா (மருதங்கேணி), மூன்றாமிடம் சி.மதுமிதா (சாவகச்சேரி), மத்திய பிரிவு - முதலாமிடம் லோ.கிஷாயினி (சண்டிலிப்பாய்), இரண்டாமிடம் இருவர் ஆ.அனஸ்ரிகா (தெல்லிப்பழை), லி.சரண்யா (காரைநகர்), மேற்பிரிவு - முதலாமிடம் டோ.சீயோன் (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் கி.சந்திரசேகரசர்மா (நல்லூர்), மூன்றாமிடம் வி.விதுஷா (சங்காணை), சிறுவர் கதை - கீழ்ப்பிரிவு - முதலாமிடம் சி.சர்திகா (உடுவில்), இரண்டாமிடம் வி.பிரவீனா (சாவகச்சேரி), மூன்றாமிடம் த.நிலாஜினி (நெடுந்தீவு), மத்திய பிரிவு - முதலாமிடம் அ.நிவேதா (பருத்தித்துறை), இரண்டாமிடம் ந.ருஜித்திகா (ஊர்காவற்றுறை), மூன்றாமிடம் வி.தரங்கினி (நெடுந்தீவு), மேற்பிரிவு - முதலாமிடம் அ.கியூறிலூட்சலா (நெடுந்தீவு), இரண்டாமிடம் பு.சுதர்சிகா (மருதங்கேணி), மூன்றாமிடம் செ.சதுஜா (கரவெட்டி), அறிவிப்பாளர் - கீழ்ப்பிரிவு - முதலாமிடம் கு.பபிஷன் (தெல்லிப்பழை), இரண்டாமிடம் வி.அனுஸ்கா (பருத்தித்துறை), மூன்றாமிடம் ந.யதுசியா (கரவெட்டி), மத்திய பிரிவு - முதலாமிடம் சு.சந்தோஷ் (சண்டிலிப்பாய்), இரண்டாமிடம் சி.லனுசன் (தெல்லிப்பழை), மூன்றாமிடம் பொ.யுனிற்றன் (மருதங்கேணி), மேற்பிரிவு - முதலாமிடம் வி.நிலுஜா (மருதங்கேணி), இரண்டாமிடம் யோ.யோகிதன் (தெல்லிப்பழை), மூன்றாமிடம் கி.பிரதீபன் (கரவெட்டி), கிராமிய நடனம் - கீழ்ப்பிரிவு - முதலாமிடம் கிருசிகா குழு (காரைநகர்), இரண்டாமிடம் ரிலக்ஷனா குழு (வேலணை), மூன்றாமிடம் லாவண்யன் குழு (தெல்லிப்பழை), மத்திய பிரிவு - முதலாமிடம் அபிசரன் குழு (தெல்லிப்பழை), இரண்டாமிடம் சௌமியா குழு (சண்டிலிப்பாய்), மூன்றாமிடம் ஆருசன் குழு (மருதங்கேணி), மேற்பிரிவு - முதலாமிடம் கோசிகா குழு (தெல்லிப்பழை), இரண்டாமிடம் காயத்திரி குழு (காரைநகர்), மூன்றாமிடம், தினேஸ்குமார் குழு (யாழ்ப்பாணம்), சிறுவர் - திறந்த போட்டி - முதலாமிடம் வினித்டிருசன் குழு (தெல்லிப்பழை), இரண்டாமிடம் சகிலயன் குழு (மருதங்கேணி), மூன்றாமிடம் மொனிஷா குழு (கரவெட்டி), செய்யுள் - கீழ்ப்பிரிவு - முதலாமிடம் ப.யோதினி (கோப்பாய்), மத்திய பிரிவு - முதலாமிடம் ம.மதுரிகன் (தெல்லிப்பழை), இரண்டாமிடம் கி.ஜெரீனா (கோப்பாய்), மூன்றாமிடம் அ.மேரிசுபர்ணா (நெடுந்தீவு), மேற்பிரிவு - முதலாமிடம் ஜெ.ரித்திகா (கோப்பாய்), இரண்டாமிடம் றொ.மேரிறொபிசா (நெடுந்தீவு), மூன்றாமிடம் கா.சுபாரகா (நல்லூர்), உறையுள் - கீழ்ப்பிரிவு - முதலாமிடம் ச.கபிசனன் (பருத்தித்துறை), இரண்டாமிடம் மா.மாதுஷன் (உடுவில்), மூன்றாமிடம் ஞா.சயானா (ஊர்காவற்றுறை), மத்திய பிரிவு - முதலாமிடம், யோ.ரம்மியராஜ் (சாவகச்சேரி), இரண்டாமிடம் நி.கஜானன் (தெல்லிப்பழை), மூன்றாமிடம் ந.யதுசா (சங்காணை), மேற்பிரிவு-முதலாமிடம் ஆவாசினி (உடுவில்), இரண்டாமிடம் உ.கம்சாயினி (தெல்லிப்பழை), மூன்றாமிடம் ந.மகிழினி (பருத்தித்துறை). (இ-246)

# தலைக்கவசத்தால் தாக்குதல் இளைஞனின் தலையில் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி சரசாலைப் பகுதியில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரின் தலைக்கவச தாக்குதலுக்கு இலக்காகி தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் வேலையை முடித்துக் கொண்டு சரசாலையில் உள்ள தனது வீடு நோக்கிச் சென்ற 26 வயது இளைஞனே இடை நடுவில் வழி மறிக்கப்பட்டு தலைக் கவசத்தால் தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

# குருஷேத்திர மாணவர்களின் "தண்ணுமைப் பிரவாகம்"

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் குருஷேத்திர மாணவ, மாணவிகள் வழங்கும் "தண்ணுமைப் பிரவாகம்" நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆசியுரையை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா வழங்குவார்.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை உணர்வு நீக்கவியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# நல்லூரிலிருந்து கதிர்காமம் வரை புனித திருத்தல யாத்திரை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரக் கந்தன் ஆலயத்திலிருந்து கதிர்காமம் ஆலயம் வரை புனித திருத்தல யாத்திரை எதிர்வரும் 24.10.2018 - 26.10.2018 வரை நடைபெறவுள்ளது.

24 ஆம் திகதி நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து காலை 7 மணிக்கு ஆரம்பமாகி பிரதான வீதியூடாக கைதடி பிள்ளையார், தொடர்ந்து பரந்தன்-முல்லை. வீதியால் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் கருந்தூர் மலை, நெடுங்கேணி, வெட்டுக்குநாறி மலை சிவன், பழனி மலை முருகன், வேப்பங்குளம் ஸ்ரீபத்திரகாளி அம்மன், தொடர்ந்து திருகோணமலை லக்சுமிநாராயணன் கோவில், மட்டக்களப்பு மண்டூர் முருகன், திருக்கோவில், தாந்தாமலை என பல வரலாற்று பிரசித்தி பெற்ற ஆலய தரிசனம், பஜனை வழிபாடுகளுடன் 25.10.2018 மாலை கதிர்காமம் சென்று இரவு தங்கி அதிகாலை ஏழுமலையானை தரிசித்து அபிஷேகம் செய்து வள்ளிமலை. என எல்லாம் தரிசித்து மாலை திரும்பவுள்ளது.

இதில் இணைய விரும்பும் அடியார்கள் ஆசார சீலர்களாக சைவத் தமிழ் கலாசாரம் பேணவேண்டும். ஒழுக்க சீலர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 076 718 1984 என்ற இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி பதிவினை மேற்கொண்டு வரைவினை உறுதிப்படுத்தி பேருந்து இருக்கைகளை உறுதிசெய்யுமாறு இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-9)

## புலமைப் பரிசில் பெறுபேறுகள்-2018

யாழ்/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலை

ஜெ.புருஷோத்-176, மோ.கீர்த்தனா-175.

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிவலயத்தில்வெற்றிடமாகவுள்ள யா/கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலையில் (வகை-III) அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்வரும் தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.இலங்கை அதிபர் சேவையில் தரம் III இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2.இலங்கை அதிபர் சேவையில் அதிபராக கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது).

3.வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

4.விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6.விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 25.10.2018 ஆகும்.

7.விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

8.விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (இ)

# உத்தியோகத்தர்கள் நியமனம்


(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோவிற்குடியிருப்புப் பிரதேச ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு புதிய கிராம உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். சரசாலை தெற்கு ஜே/316 கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்று வந்த க.கார்த்திகேயன் கிராம உத்தியோகத்தராகவும் கோவிலாக்கண்டி ஜே/296 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ந.சுதர்சன் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். கிராம உத்தியோகத்தர் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஜே/301 இல் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். அதேபோல் ஜே/301 இல் 9 வருட காலம் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ப.நிரஞ்சன் கல்வயல் ஜே/305 கிராம உத்தியோகத்தராகவும், 6 வருட காலம் ஜே/301 இல் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ச.செந்தீபா ஜே/302 சங்கத்தானை அபி விருத்தி உத்தியோகத்தராகவும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். கோவிற்குடியிருப்பு ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவானது தரை, கடல் என்ற இரண்டு வட்டாரங்களையும், 700 இற்கு மேற்பட்ட குடும்பங்களையும், 1800 இற்கும் மேற்பட்ட வாக்காளர்களையும் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)



வேலணையூர் ரஜிந்தனின் "நிலா நாழிகை", "பொற்கனவு" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலணை தெற்கு தாளையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு யாழ்.இலக்கியக் குவியத் தலைவர் கவிஞர் வேலணையூர் தாஸ் தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் கலந்து கொண்டார்.

# அழைப்பிதழ்



## மு/வித்தியானந்த கல்லூரியின் முதல்வர்
## திரு.பொ.க.சிவலிங்கம்
அவர்களின்
# மணிவிழா

காலம்:- 2018.10.18 வியாழக்கிழமை மு.ப.10.00 மணி
இடம்:- கல்லூரி பிரார்த்தனை மண்டபம்

வன்னிக்கு வாய்த்த வரம்
கல்விக்கு காய்த்த மரம்
முல்லை மண்ணில்
முளைத்த மரம்-இந்த
சிவலிங்கமென்னும் சிந்தை மரம்

போர் வந்து நின்ற போதும்
வித்தியானந்தா
பெயர்சொல்லவைத்தவரே
ஊர் வந்து நின்றபோதும் எதிலும்
உண்மைதனை உரைத்தவரே

அவசர உலகினிலும்-நீர்
அமைதியாய் நடந்திடுவீர்
புகழையோ விரும்பாது-சிறு
புன்னகையில் கடந்திடுவீர்...

பள்ளிக்கல்வியை உயர்த்த-நீர்
பகலிரவு பார்க்கவில்லை
பல்கலைக்கழகம் நிற்கும் -உன்
பலநூறு மாணவர்கள்
பகிர்ந்திடுவர் உன் சேவைதனை

நீர் நீடூழி வாழ்ந்திடவே
நிதம் இறைவனை வேண்டுகின்றோம்
வாழ்வாங்கு வாழ்ந்து-இவ்
வையத்தை வாழ வைப்பீர்.
(வாழ்க வளமுடன்) - பவிக்குமார்

60
1958 - 2018



மணிவிழா
ஏற்பாட்டுக் குழுவினர்

---

கரவெட்டி கிழக்கு தல்லையம்புலம் பழம் பத்திரகாளி அம்மன் கோவிலில் 19.10.2018 காலை கௌரி விரத பூசை ஆரம்பமாகி 20 ஆம் நாள் கௌரி நூல் வழங்கப்படும். அடியவர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

க.சோமசுந்தரக்குருக்கள், ஆலய பிரதம குரு

(8096)

---

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தரம் 6 மாணவர் அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்-2019

2019 ஆம் ஆண்டு தரம் 6 இல் இணைய தகுதியுள்ள மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரியின் மாணவர் நலன்புரிச் சங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இம் மாணவர்களுக்கான பாடசாலையால் வழங்கப்படும் மேலதிக சலுகைகள்

01. எமது கல்லூரியில் விசேடமாக நடைமுறைப்படுத்தும் புலமைப்பரிசில் நிதியத்தின் புலமைப்பரிசில் தரம் 6 தொடக்கம் 13 வரை மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும் (J.C.C. Edu.care Trust)

02. தரம் 6 இல் இருந்து விசேட கணனிப் பயிற்சி

03. இலவச கரம், சதுரங்கம், மேசைப்பந்து பயிற்சி

04. இலவச கராத்தே தற்காப்பு கலைப்பயிற்சி

குறிப்பு :- புலமைப்பரிசில் பரீட்சையில் 110 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுமதி விசேட பரீட்சையில் தெரிவு செய்யப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி;- 30.10.2018

(சி/4166)

---

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 177cm
தகைமை/தொழில்:MSc/
பொறியியலாளர் லண்டன்
தொ.இ: B/8981

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 39 செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: BSc, MSc/
மருத்துவ உயிரியல் ஆய்வாளர்
தொ.இ: B/8983

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: சூரி செவ் 2 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:BA/அரச தொழில்
தொ.இ: B/8985

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 32 செவ்4இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BBA, MBA/
தனியார் தொழில்
தொ.இ: B/8989

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 40 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/1553

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 29 செவ்12இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: G/1572

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:09 செவ் 7இல் உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/1590

பிறப்பு: 1981 NONRC
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 33 செவ் 8இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MSc/லண்டன்
NOT PR
தொ.இ: G/1598

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வவுனியா மாவட்டத்தில் வரட்சியினால் 2 ஆயிரத்து 370 குடும்பங்கள் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தகவல்

(பனிக்கன்குளம்)

**வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 2ஆயிரத்து 370 குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரத்து 583 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தெரிவித்துள்ளது.**

தகவல் அறியும் சட்டத்தினூடாக கேட்கப்பட்ட தகவல்களுக்கு வழங்கப்பட்ட பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வரட்சி நிவாரண செயற்பாடுகள் 2018 வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா தெற்கு, வவுனியா ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஒக்டோபர் மாதம் வரை வரட்சியினால் பாதிக்கப்பட்டு குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள 2 ஆயிரத்து 370 குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரத்து 583 அங்கத்தவர்களுக்கு ஏப்ரல் மாதத்திலிருந்து ஒக்டோபர்மாதம்வரையான காலப்பகுதிகளில் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

இக்குடிநீர் விநியோகத்திற்காக ஆயிரத்து 742 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டை தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் வழங்கியுள்ளதுடன் ஒக்டோபர்மாதம் வரை அதற்கான மொத்த செலவீனமாக 616.774.70 காணப்படுகின்றது.

மேலும்வரட்சி உலருணவு நிவாரணம் முதலாம் கட்டம் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயக்கூலியாட்கள் மற்றும் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையாளர்களுக்கான நிவாரண உதவிகள் இரண்டாம் கட்டம், வரட்சியினால் பாதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெறும் பிரதேசங்களில் காணப்படும் பொதுக்கிணறுகள் ஆழப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் வரட்சியால் 2016/2017 பெரும்போகம் 2017 சிறுபோகம் மற்றும் 2017/2018 பெரும் போகம் ஆகிய மூன்று காலப்பகுதியிலும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட 23.911 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம்வழங்குவதற்காக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திடம் 111.878 மில்லியன் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளதுடன் 36.242 மில்லியன் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. மிகுதி ஒதுக்கீடு அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும். அதற்கான வேலைத்திட்டங்கள் உரிய பிரதேச செயலகங்கள் ஊடாக நடைபெறுகின்றது.

வரட்சியால் பாதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெறும் பிரதேசங்களில் காணப்படும் 39 பொதுக்கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு என தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் 2.704 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## வவுனியாவில் தொடரும் அடைமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழையுடனான காலநிலை நீடித்துள்ள நிலையில் அடைமழை பெய்து வருகின்றது.

இடி முழக்கத்துடன் மழை பெய்து வருவதால் பொது மக்களின் இயல்புவாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

அத்துடன் தூர இடங்களிலிருந்து வவுனியாவிற்கு வந்தவர்கள் திரும்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அண்மைய காலங்களுடன் ஒப்பிடுகையில் மழை தொடர்ந்து பெய்து வருகின்றது.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக கைவிடப்பட்ட வயல்நிலங்களில் வயல் செய்கைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

குளங்கள் மழை வெள்ளத்தினால் நிறைந்துள்ளன. பூம்புகார் பகுதியிலுள்ள குளத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது எனினும் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. வெடிப் புக்குள்ளான குளத்தின் புனரமைப்பு இடம்பெற்றுள்ளது. (2-281)




## கிளிநொச்சி குளத்தின் எல்லைகளை வரையறை செய்து ஆழப்படுத்துங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சிக் குளத்தினை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரத்தின் மையப்பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய வகையிலும் நகருக்கான நீர்த்தேவையை பூர்த்தி செய்யும்வகையிலும் அமைந்துள்ள கிளிநொச்சிக் குளத்தின் கரையோரப்பகுதிகள் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் எதிர்காலத்தில் குளம் இல்லாமல்போகின்ற நிலைமை காணப்படுவதாக பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

அதாவது, கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை ஆகிய பகுதிகளுக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் பூநகரி மற்றும் தட்டுவன் கொட்டிப்பகுதிக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்துகின்ற இக்குளத்தின் இயற்கைத் தன்மையையும்குளத்தையும்பாதுகாக்க உரிய, திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல்வேறு தரப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, கிளிநொச்சி குளத்தினுடைய கரையோரப்பகுதிகளின் எல்லைகளை வரையறை செய்து குளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அத்தோடு மண் நிரவிக் காணப்படுகின்ற குளத்தை ஆழப்படுத்தி அதன் இயற்கைச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-315)

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 100 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட நூறு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும்நிகழ்வு துணுக்காய்வலயக்கல்வி அலுவலகத்தில் துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ. கமலேஸ்வரனின் 2018 ஆம் ஆண்டு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நூறு துவிச்சக்கர வண்டிகளே நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் 90 மாணவர்களுக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் 10 பேருக்குமாக மொத்தம் நூறு பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை. சேனாதிராசா,பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் , புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர்,உறுப்பினர்கள்,அதிபர்கள்,ஆசிரியர்கள்,மாணவர்கள், பெற்றோர் என பலரும்கலந்து கொண்டிருந்தனர்.(2-281)



வ/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையில் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் செ.ஜேசுநேசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் க.சோதிநாதன் கலந்து சிறப்பித்தார். இதன்போது ஆசிரியர்கள் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினர்களுடன் அதிபர் மற்றும் ஆசிரியர் குழாம் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## ஒட்டுசுட்டான் வெடிபொருள் விவகாரம்; 12 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

## மீண்டும் 29 இற்கு வழக்கு விசாரணை

(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான்பகுதியில்கடந்த 22.06.18 இல் புலிக்கொடி மற்றும் வெடிபொருட்களுடன் பயணித்த ஆட்டோ சாரதி உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த வேளை பயங்கரவாத குற்றத் தடுப்பு விசாரணைப்பிரிவினர் குறித்த விசாரணையினை மேற்கொண்ட நிலையில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள்மீதான வழக்குவிசாரணை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பிணையில் விடுதலையான ஏழுபேர் மீதும் பாரதூரமான குற்றம் சுமத்தப்படாத காரணத்தால்வழக்கில்இருந்து நீதிமன்றம் விடுவித்துள்ளதுடன் இந்த வழக்கு தொடர்பில்மேலும்ஒருவர்கைது செய்ய வேண்டியுள்ளதாக பயங்கரவாத குற்றத் தடுப்பு விசாரணை பிரிவினர் மன்றில் தெரிவித்துள்ளார்கள். இந்நிலையில்இந்த வழக்கு தொடர்பான அடுத்த கட்ட விசாரணை 29.10.18 அன்று திகதி இடப்பட்டுள்ளது.(2-281)

## கட்டாக்காலி கால்நடைகளை பிடிப்பதற்கு புதுக்குடியிருப்பு பிரதேசசபை நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியிலுள்ள கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந் நடவடிக்கை நேற்று முன்தினம் இரவு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உதவி தவிசாளர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்ககப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (2-281)

## வெளிச்சவீடு அமைக்கப்படாமையால் கரை திரும்புவதில் இடர்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி கிராஞ்சிப்பிரதேசத்திற்குட்பட்ட இலவங்குடா, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் வெளிச்சவீடுகளை அமைத்துத் தருமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சி கடற்றொழிலாளர்கள் ஆழ்கடல் தொழிலுக்குச் சென்று கரை திரும்புவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருவதாகவும் இந்த இடர்பாடுகளை தவிர்க்கும் முகமாக கிராஞ்சி கடற்றொழில் எல்லைக்குட்பட்ட இலவங்குடா, மற்றும் காக்கைதீவு ஆகிய பகுதிகளில் வெளிச்சவீடுகளை அமைத்துத் தருமாறும் மீனவர்கள் கோரியுள்ளனர்.

குறித்த கோரிக்கையானது தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றபோதும் இதுவரை வெளிச்சவீடுகள் அமைக்கப்படவில்லை என பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

## வீதி விளக்குகள் பொருந்தும் பணிகள் பளையில் ஆரம்பிப்பு



(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் வீதிவிளக்குகள்பொருத்தும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக பளை நகரம்,சந்தை பகுதிகளில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

பொது மக்கள் பச்சிலைப்பள்ளி வர்த்தகர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனின் பணிப்பிற்கிணங்க குறித்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு பிரதேச சபையின் உபதவிசாளர் முத்துக்குமார் கஜன் ,உறுப்பினர்களான ரமேஷ் வீரவாகுதேவர் கோகுல்ராஜ் ஆகியோர் நேரில் சென்று குறித்த பணிகளை பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சில நாட்களின் கிராமிய மின்விளக்குகளும் வட்டார ரீதியாக பொருத்தப்படவுள்ளதாகவும்தவிசாளர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

# இராணுவத்தின் 68வது ஆண்டு பூர்த்தி, விசேட சமய வழிபாடு



(குருமன்காடு)

வவுனியா நகரப்பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இலங்கை இராணுவத்தின் 69ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு விஷேட சமய வழிபாடு இடம்பெற்றது.


வவுனியா நகர ஜும்மா பள்ளியின் பிரதான மௌலவி அல் ஹபீர் அமிரின் ஆலோசனைக்கு அமைவாக நிர்வாக சபை மற்றும் பிரதேச முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்புடனும் வன்னி எஸ். எப். கொமாண்டர் மேஜர் ஜெனரல் குமுது பெரேரா தலைமையில் ஜும்மாப் பள்ளியில் விஷேட வழிபாடு இடம்பெற்றது.

விசேட பிரார்த்தனையின் போது 59 ஆவது இராணுவப் படையணியும் 5 பிரிவுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்களும் கலந்துகொண்டிருந்தனர். இராணுவத்தினரின் 69 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு பாதுகாப்புப் படை தலைமையகம் வன்னிக் குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பாதுகாப்புப்படை தலைமையகம், வன்னி கட்டளை தலைமையகம், இன்பே வடமத்திய படைப்பிரிவு தலைமையகம் மற்றும் படைகளின் கொடிகளுக்கும் நகரப் பள்ளிவாசலில் இடம்பெற்ற விசேட வ்ழிபாடுகளில் ஆசீர்வாதமும்வழங்கப்பட்டது.(2-250)




# மன்னார் மனித புதைகுழி தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் கூறவேண்டாம்

## சட்டவைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(மன்னார்)

மன்னார் மனித புதைகுழியை அகழ்வு செய்யும் பணியும் மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகளே நடைபெறுகின்றன. குறித்த மனித எச்சாங்களின் காலப்பகுதி மற்றும் ஏனைய விபரங்களை அறியும் ஆய்வுப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. தற்போது முழுமையாக அகழ்வுப் பணியையே மேற்கொள்கின்றோம். முழுமையான ஆய்வின் பின்னர் துல்லியமான தகவல்களை வழங்குவோம். ஆதலால் புதைகுழி தொடர்பான உண்மை நிலையை அறியாது எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டாம் என சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியானது 89 ஆவது நாளாகவும் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது. தொடர்ச்சியாக மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டும் அப்புறப்படுத்தப்பட்டும் வருகின்றன.

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மேற்பார்வையிலும் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையிலும் அகழ்வு பணியானது இடம்பெற்று வருகின்றது.

கடந்த வாரம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர, மன்னார் மனித புதையில் கண்டுபிடிக்கப்படும் மனித எச்சங்கள் அனைத்தும் விடுதலை புலிகளின் காலத்தில் கொன்று புதைக்கப்பட்ட சிங்கள மக்களின் எச்சங்களாகவும் இருக்கலாம் எனவும் தமிழர் புலம் பெயர்ந்த அமைப்புக்கள் இந்த மனித எச்சங்கள் இராணுவத்தினரால் கொன்று புதைக்கப்பட்ட தமிழர்களின் எச்சங்கள் எனவும் திரிவுபடுத்தி ஐக்கிய நாடுகள் சபைக்கு காண்பிப்பதாகவும் கருத்து தெரிவித்திருந்தார்.

மனித புதைகுழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கையிலேயே தடயவியல் நிபுணர்கள் இருக்கின்றனர். ஆனாலும் திட்டமிட்ட வகையில் குறித்த புதைகுழி தொடர்பான மாறுபட்ட எண்ணக் கருவை தோற்றுவிப்பதற்காக இந்தியாவில் இருந்து தடயவியல் நிபுணர்களை அழைத்துவருவதற்கு மன்னார் நீதிமன்றில் அனுமதி கோரியுள்ளனர் எனவும் கருத்து தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் நேற்றைய தினம் மனித புதைகுழி வளாகத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த சமிந்த ராஜபக்ஷவிடம் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து தொடர்பாக வினவப்பட்டது.

குறித்த கேள்விக்கு பதில் அளித்த சட்டவைத்திய அதிகாரி தற்போது மனித புதைகுழியை அகழ்வு செய்யும் பணியும் மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகளே நடை பெறுகின்றது.

குறித்த மனித எச்சங்களின் காலப்பகுதி மற்றும் ஏனைய விபரங்களை அறியும் ஆய்வு பணி ஆரம்பிக்கப்படவில்லை. எனவே யாராக இருந்தாலும் மன்னார் புதைகுழி தொடர்பான உண்மைநிலையை அறியாது எந்தவித கருத்துக்களையும் தொரிவிக்க வேண்டாம்.

என்னோடு இணைந்த குழுவினர் முழுமையான ஆய்வின் பின்னர் துல்லியமான தகவல்களை வழங்குவோம். எனவே அதுவரை வீணான கருத்துக்கள் விவாதங்களை தவிர்க்குமாறு தெரிவித்திருந்தார். அத்துடன் அண்மையில் மன்னார் மனித புதை குழியை பார்வையிடுவதற்காக வந்த இந்திய சிவில் சமூக உறுப்பினர் வெறுமனே நீதிமன்ற அனுமதியுடன் புதைகுழியை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களாக வந்தார்களே தவிர வேறு எந்தவிதமான காரணங்களுக்காகவும் வருகை தரவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை 185 மனித எச்சங்கள் குறித்த வளாகத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் 179 மனித எச்சங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (2-285)

# காணாமல் போனோர் அலுவலகம் பணத்தைக் கொடுத்து ஏமாற்றுகின்றது

## முல்லைத்தீவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள்!

இலங்கை அரசின் காணாமல் போனவர்கள் அலுவலகம் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதம் தோறும் ஆறாயிரம் ரூபா பணத்தை கொடுக்க அரசாங்கம் அங்கீகரித்துள்ளமையானது, உண்மையில் காணாமல் போராட்டம் மேற்கொண்டுவரும் எங்களின் போராட்டத்தை மழுங்கடிக்க செய்வதும் திசைதிருப்பும் நோக்கமாக கொண்டு செயற்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் இணைப்பாளராக செயற்படும் ஈசுஸ்வரி கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் காணாமல்போனவர்களின் அலுவலகம் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதம் ஆறாயிரம் ரூபா வழங்குவதற்கு தீர்மானித்துள்ளார்கள்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை நேற்று அழைத்து மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்ட கொட்டகையில் ஒரு சந்திப்பை மேற்கொண்டு சில முடிவுகளை எடுத்துள்ளோம். (2-281)

# குமுழமுனை பொதுச்சந்தை புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, குமுழமுனை பொதுச் சந்தையின் புனரமைப்புப்பணிகள் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குமுழமுனைப் பிரதேச சபை உறுப்பினர் இ. கவாஸ்கரின் முயற்சியினால் சபைக்கு கொண்டுவரப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையில் குமுழமுனையின் பொதுச் சந்தையில் அடிப்படைத் தேவைகள் காணப்படுவதாகவும் அதனை நிறைவேற்றுவதற்கு பிரதேச சபை யின் நிதி ஒதுக்கீட்டில் நேற்று புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றன. வசதியற்ற நிலையில் காணப்பட்டுள்ள குமுழமுனை பொதுச்சந்தை மக்களின் நீண்டநாள் தேவையை நிறைவேற்றுவதற்கான பணிகளில் சந்தையைச் சுற்றி வேலிகள் அமைக்கப்பட்டு இரண்டு நுழைவாயில்களுக்கும் பிரதான வீதிகள் கிரவல் இட்டு அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் அப்பகுதி மக்களின் நீண்டகாலத் தேவை நிறைவேற்றப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (2-281)

# திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்களுக்கு பொலிஸாரால் உதவிகள்





லைக்கா நிறுவனத்தின் அனுசரணையோடு திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்களுக்கு பொலிஸாரால் உதவிகள் நேற்றுக் காலை 10.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.


முல்லைத்தீவு மாவட்டத்தின் முறிகண்டி பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் இருந்து கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு குறித்த முதல் கட்ட உதவிகள் பொலிஸாரால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் மகேந்திர கரு ணாரட்ண, வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன், மாங்குளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 10 மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், 25 மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வைப்பில் இடப்பட்ட வங்கி கணக்கு புத்தகமும் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த 25 மாணவர்களின் கல்வி காலம் முடியும்வரை மாதாந்தம் கற்றல் செலவுகளுக்காக ஆயிரம் ரூபா வைப்பிலிடவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் குறிப்பிட்டார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பொலிஸார் இவ்வாறான சமூக பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கல்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 41 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நிதியத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் 41 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி கல்லூரியில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் உகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.

இதன்போது விவசாயிகள் மத்தியில் உரையாற்றிய விவசாய அமைச்சர் வடக்கு மாகாண சபைக்கு குறைந்த அதிகாரங்களாக இருந்த போதிலும் கூட மக்கள் மத்தியில் பல சேவைகளை ஆற்றியுள்ளோம். மாகாணசபை எதை சாதித்தது என்ற விமர்சனமும் எழாமல் இல்லை. மாகாண சபையில் எங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் மிக குறைந்த அளவே காணப்படுகின்றது.

1987 ஆம் ஆண்டு மாகாண சபை உருவாக்கப்பட்டாலும் கூட போர் நடைபெற்று அந்த போர் மௌனித்த சூழ்நிலையில் மாகாணசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையாக பெற்று ஆட்சியினை அமைத்து முதலாவது சபையை நிறைவேற்றி இருக்கின்றது.

மக்கள் மத்தியில் பல திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகள் வரட்சியால் விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதுபோல இங்கு வரட்சி தொடருமாக இருந்தால் இன்னும் மோசமான நிலைக்கு விவசாயிகள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். இந்த காலகட்டத்தில்தான் எங்கள் மாகாண சபை இறுதி நிலையை அடைகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (2-281)

# கலைத்தரிசனம்





## நாட்டுக்கூத்து அண்ணாவியார் எ.வரப்பிரகாசம் அவர்களுடனான சந்திப்பு

**யாழ்.மாவட்டம் நீர்வேலியில் பிறந்தவரும் தற்போது சென்மேரிஸ் வீதி, கொழும்புத்துறை எனும் முகவரியில் வசித்து வருபவருமான எலியாஸ் வரப்பிரகாசம் அவர்கள் தனது எட்டு வயதில் இருந்தே தென்மோடி வகை நாட்டுக்கூத்துக்களில் நடித்து வருகிறார். எலியாஸ் குளோறியா தம்பதியின் ஐந்தாவது பிள்ளையாக 1930.08.18 இல் பிறந்த இவர் தற்போது தனது 88 ஆவது வயதிலும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் கலைச்சேவையாற்றி வருகிறார். தென்மோடி நாட்டுக் கூத்துக்களான "தேவ சகாயம் பிள்ளை", "ஸ்ரெனபேன்", "பிரான்சிஸ் அசீசிவர்", "கவிஞன் கண்ட கனவு" உள்ளிட்ட பல நாட்டுக் கூத்துக்களை நடித்ததோடல்லாமல் பிரதிகள் எழுதி நெறியாள்கையும் செய்து வருகிறார். அண் மையில் பெற்றுக்கொண்ட முதலமைச்சர் விருது உட்பட ஒன்பதிற்கு மேற்பட்ட பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார். தென்மோடிக் கூத்து மரபினை வகைத்தூய்மையுடன் நன்கு அறிந்தவகையினும் அதன் பாடல்களை உச்சசாரீரத்தில் பாடவும் வல்லவர். தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் மிகச் சிலவான அண்ணாவிமார்களில் முதன்மையான ஒருவராகக் காணப்படுகிறார். இவர் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரியின் கலைத்தரிசனம் பகுதிக்காக தந்தவற்றைத் தருகின்றோம்.**

**◆நீங்கள் இந்தக் கலைத்துறைக்குள் பிரவேசித்தது தொடர்பாக கூறுங்கள்?**

யாழ்.நீர்வேலி எனது சொந்த இடம். இந்த நீர்வேலிக் கிராமத்திலே நான் ஒரு கலைக்குடும்பத்தில் பிறந்தேன் என்று சொல்வதில் மிக்க மகிழ்வடைகிறேன். கலையினூடே நான் இவ்வளவு பிரபல்யம் அடைந்ததற்கும் பட்டங்கள். பரிசுகள் பெற்றதற்கும் இன்னும் ஏராளமான நாட்டுக் கூத்துகளை ஆடி நெறியாள்கை செய்து பிரதிகளை எழுதியதற்கும் ஏராளமான நாட்டுக் கூத்துக் கலைஞர்களை உருவாக்கியதற்கும் எனது கலைக்குடும்பப் பின்னணியே காரணமாக அமைந்தது என்று சொல்வதில் பெருமையடைகிறேன். எனக்கு சிறுவயதில் இருந்தே பாடல்களை ரசித்துக் கேட்பதிலும் பாடுவதிலும் அலாதியான பிரியம் இருந்தது. அதன் காரணமாக நான் எப்பொழுதெல்லாம் நேரங்கிடைக்கிறதோ அவ்வப்பொழுதுகளில் எல்லாம் பாடிக் கொண்டேயிருப்பேன். எனது சிறுபராய நாட்களில் எங்கள் ஊரிலுள்ள பரலோக மாதா கோவிலில் புதிய புதிய நாட்டுக் கூத்துகளை அரங்கேற்றுவார்கள். பெரும்பாலும் அவைகள் கிறிஸ்தவ நாட்டுக்கூத்துக்களே. அந்த நாட்டுக் கூத்துக்களை பழகும் வேளைகளில் அந்தக் கூத்துப் பாடல்களை அப்படியே மனனஞ் செய்வதோடு அவர்கள் பாடும் இசைவழி பாடிப் பார்ப்பேன். இப்படியான வேளையில் எனது எட்டாவது வயதில் எங்களூரில் ஆகத்தம்மாள் என்ற நாட்டுக் கூத்தை பழக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நாட்டுக் கூத்தில் எனக்கு சம்மனசு என்று சொல்லப்படுகின்ற வானதூதர் வேடம் வழங்கப்பட்டது. இச் சம்பவம் 17.08.1938 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. இந் நாட்டுக்கூத்தின் அண்ணாவியாரும் எனது தொட்டய்யாவுமாகி ஞானமுத்து இந்த சம்மனசு பாத்திரத்துக்கு என்னைத் தெரிவு செய்து எனது கலையுலக பிரவேசத்துக்கு வழி செய்தார் என்று கூறலாம்.

**◆உங்கள் கலையுலகின் செயற்பாடுகள் தொடர்பாக கூறுங்கள்?**

இப்படியாக எனது முதலாவது மேடைப் பிரவேகம் முடிந்த அந்த நாள் அந்தக் கால வழக்கப்படி கலையில் அதேபாத்திர உடைகளுடன் அயலில் உள்ள வீடுகளுக்குச் சென்று பாடி நடித்துக் காட்டும் வழக்கம் இருந்தது. அப்போது அவர்கள் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கால் சிறு,சிறு அன்பளிப்புக்கள் தந்து பாராட்டி ஊக்கப்படுத்துவார்கள். இவ்வாறே நீர்வேலி பரலோகமாதா ஆலய பங்குத்தந்தையாக இருந்த சுவாமி சுவாமிப்பிள்ளை எனக்கு காற்சட்டையும் சேட்டும் தோடம்பழ இனிப்பும் தந்து ஆசீர்வதித்தார். இதைத் தொடர்ந்து அந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் மேடையேற்றப்படும் நாட்டுக் கூத்தில் எனக்கும் ஒரு பாத்திரம் தரப்பட்டு தொடர்ந்து நான் மேடையேறுவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. பின்னர் எனது 18,20 வயது இளமைக்காலத்தில் எனது தொட்டய்யாவின் மகன் அந்தோனிப்பிள்ளை அண்ணன் நாட்டுக் கூத்து அண்ணாவியாராக கூத்துக்கள் பழக்கி வரும் போது பக்கப்பாட்டுப் படிக்கவும் தாளம் போடவும் என்னை இணைத்துக்கொண்டார். அதன் காரணமாக நான் நாட்டுக் கூத்தின் தன்மைகளை, அவற்றின் நெளிவு சுழிவுகளை அறியக் கூடியதாக இருந்தது. இதனைத் தொடர்ந்து நாட்டுக் கூத்துக்களில் எனக்கு பற்பல பாத்திரங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி சனசமூக நிலையத்தினர் எனது அண்ணன் அந்தோனிப்பிள்ளை அண்ணாவியாரிடம் உடைபடாத முத்திரை என்ற நாட்டுக் கூத்தைப் பழகினோம். அதில் வென்சிலாஸ் அரசனாக அண்ணாவியாரும் அரசனின் மனைவி அருளம்மாவாக நானும் இன்னும் பலருமாக நடித்தோம். அந்த நாள்களில் இது இரண்டு நாள் கூத்தாகவே ஆடப்பெற்று வந்தது. அப்பொழுதெல்லாம் இரண்டு நாள்கள் கூத்து ஆடும்போதெல்லாம் நிறைந்தளவு பார்வையாளர்களைக் கொண்டே இந்தக் கூத்துக்கள் அரங்கேறும். கூத்துக்களை, அதன் காட்சிகளை ரசிகர்கள் அணு அணுவாக ரசிப்பார்கள். காட்சியமைப்பு, ஒப்பனை, இசை, ஒலி ,ஒளி, நடிப்பு, பாட்டு என்று அத்தனை விடயங்களையும் பரந்த ரசிகர்களின் பாராட்டைப் பெற்றோம்.

**◆நீங்கள் நடித்த நாட்டுக் கூத்துக்கள் தொடர்பாகக் கூறுங்கள்?**

ஆகத்தம்மாள் தென்மோடி நாட்டுக் கூத்தில் சம்மனசு (வானதூதர்) வேடத்தில் நடித்திருந்தேன். பின்னாளில் தேவசகாயம்பிள்ளை என்ற நாட்டுக் கூத்தில் கட்டியக் காரனாகவும் தேவசகாயம்பிள்ளை என்ற முக்கிய பாத்திரத்திலும் நடித்துள்ளேன்.

ஸ்ரெனபோன் என்ற நாட்டுக் கூத்தில் மகன் அருட்காதனாகவும் அற்காதனாகவும் இரண்டு பாத்திரங்களிலும் பல மேடைகளில் நடித்துள்ளேன்.பிரான்சிஸ் அசீசியர் நாட்டுக்கூத்தில் அசீசியர் வேடந்தாங்கியுள்ளேன். இன்றும் கவிஞன் கண்ட கனவு என்னும் நாட்டுக்கூத்தினை முல்லை கவி என்று அழைக்கப்படும் அமிர்தநாதன் என்பவர் எழுதியிருந்தார். அந்த நாட்டுக்கூத்திலே முனிவராகவும் கவிஞராகவும் நடித்திருந்தேன். அதனைத் தொடர்ந்து முல்லைக் கவியும் நானும் இணைந்து எழுதிய அரிச்சந்திர மயான காண்டம் நாட்டுக் கூத்தை முதன் முறையாக சுண்டிக்குளி சனசமூக நிலைய முன்றலில் அரங்கேற்றம் செய்தோம். இதில் அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை அரிச்சந்திரனாக்வும் நான் சந்திரமதியாகவும் வேடமேற்றோம்.

இந்த நாடகமும் மக்கள் மனதில் அழியாத இடம் பிடித்ததுடன் பாராட்டுகளையும் பரிசுகளையும் எமக்குப் பெற்றுத் தந்தது.

**◆நீங்கள் பெற்ற விருதுகள், பட்டங்கள் தொடர்பாகக் கூறுங்கள்?**

2018 செப்டெம்பர் 30 அன்று முதலமைச்சர் விருது, 2008 இல் யாழ்.பிரதேச கலாசார பேரவையால் யாழ்.ரத்னாவிருது, 2016 இல் யாழ்.மாவட்ட கலாசார பேரவையால் யாழ். முத்து விருது, 2018 இல் கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கத்தினால் சமூக திலகம் விருது, நீர்வேலி பரலோக மாதா ஆலயத்தில் கலைஞான கற்பகம் விருது, கொழும்புத்துறை ச.ச.நிலையத்தால் கலாமணி விருது, 2013 இல் கொழும்புத்துறை செபமாலை மாதா தேவாலயத்தால் கலைக்கோ விருது, நீர்வேலி நொகாறியன் மன்றத்தினரால் கலைக்காவலன் விருது மற்றும் மரபுக் கூத்திசைக் காவலன், கலைக்குரிசில் போன்ற விருதுகளுடன் 2003 ஆம் ஆண்டு யாழ். திருமறைக் கலா மன்றத்தாலும் வேறு பல மன்றங்களாலும் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டேன்.

**◆நாடக உலகில் 80 ஆண்டுகளைக் கடந்துள்ளீர்கள்? இவ்வேளை நாடக உலகில் நீங்கள் மறக்க முடியாத சம்பவமாக எதைக் கருதுகிறீர்கள்?**

நடிகமணி வீ.வீ.வைரமுத்துவின் அரிச்சந்திர மயான இசை நாடகம் அப்போது மிகப்பிரபலம் பெற்றிருந்த காலம். நாட்டுக் கூத்திலும் நான் பல மேடைகள் கண்டுள்ளேன். இதன் பிரதியை அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை எழுதியிருந்தார். இதில் நான் ஞானசௌந்தரியாக வேடமிட்டேன். மிக சிறப்பான ஒரு நாடகமாக இது அமைந்ததுடன் நாடக உலகில் எனக்கென்று தனி முத்திரையையும் பதித்தது என்று கூட் சொல்லலாம்.

**◆ உங்கள் நாடக நெறியாள்கைகள் தொடர்பாகக் கூறுங்கள்?**

1975 ஆம்ஆண்டு காலப்பகுதியில் அதாவது எனது கலைவாழ்வில் தேர்ச்சி பெற்ற காலப்பகுதியில் முதன்முறையாக கூத்துக்களை நெறியாள்கை செய்யத் தொடங்கினேன். எனது பிறந்த இடமான நீர்வேலியில் றொசாரியன் சனசமூக நிலையத்தில் தேவசகாயம் பிள்ளை எனும் தென்மோடி நாட்டுக்கூத்தைப் பழக்கியிருந்தேன். இக் கூத்தில் ஏனைய கலைஞர்களுடன் நானும் நடித்தேன். இதில் நான் தேவ சகாயம்பிள்ளை பாத்திரத்தில் நடுப்பாத்திரத்தில் நடித்தேன். நடுப்பாத்திரம் என்பது சிறுவர் தேவசகாயம், இளைஞன் தேவசகாயம், முதியவர் தேவசகாயம். இதில் இளைஞர் தேவ சகாயமாக நான் நடித்தேன். அவ்வேளையில் மேல்மாடி அமைத்து அதன் படிக்கட்டுக்களில் இருந்து நான் இறங்கி வரும்போது பாடிய பாட்டைக் கேட்டு பார்த்த மக்களின் கரகோஷம் வானைப்பிளந்தது. அவ்வேளையில் வெடிகள் கொழுத்தி வாணங்கள் விட்டு பூமாலைகள் போட்டு அமர்க்களப்படுத்தி விட்டார்கள். அன்றைய நாள்களில் தாள்காசுகளை நடிகர்கள் போட்டிருக்கும் ஆடைகளில் குற்றி மதிப் பளிக்கும் முறை ஒன்றுமிருந்தது. அவ் வாறு எனக்கும் செய்தார்கள். அத்துடன் பரலோக மாதா ஆலய பங்குத் தந்தையாக இருந்த அருட்தந்தை ஜெயசீலன் எனக்குப் பொன்னாடை போர்த்தி கலைஞான கற்பகம் எனும் பட்டத்தை வழங்கியிருந்தார். நீர்வேலியில் இருந்து கொழும்புத்துறைக்கு வந்து வாழ்ந்த காலத்தில் கொழும்புத்துறையில் உள்ள ஆர்வமுள்ள இளை யோர் மற்றும் பெரியவர்கள் எல்லோரையும் இணைத்து நூற்றுக்கும் மேற்பட்ட கொன்சேட் கூத்துகளை பழக்கி மேடையேற்றி வந்துள்ளேன்.


மேலும்2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா அன்று அவ் ஆலய முன்றலில் தருமப்பிரகாசன் எனும் தென்மோடி நாட்டுக் கூத்தை அரங்கேற்றம் செய்தேன். இதில் இப்பங்கைச் சேர்ந்த பிள்ளைகளே நடித்திருந்தார்கள். இதன் போது ஆலய பங்குத்தந்தையாக இருந்த ஜெறோம் குருவானவர் எனக்கு பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார். அன்று கலாபூஷணம் அருட்பிரகாசம் அண்ணாவியார் வாழ்த்துப்பா ஒன்றையும் வழங்கி கலைக்கோ என்ற பட்டத்தையும் வழங்கியிருந்தார்.

**◆கலையுலகில் தாங்களால் மறக்க முடியாத சந்தர்ப்பம் ஒன்றைக் கூறுங்கள்?**

அந்தக் காலத்தில் அரிச்சந்திர மயான காண்டம் மிகப் பிரபல்யமாக இருந்த காலம். வீ.வீ. வைரமுத்து அரிச் சந்திரனாகவும் அரியாலை வீ.கே. இரத்தினம் சந்திரமதியாகவும் நடித்தார்கள். இதேவேளை நாங்களும் அரிச்சந்திர மயான காண்டத்தை தென்மோடி நாட்டுக் கூத்தாக 'பல மேடைகளில் ஆடி வந்தோம். இதில் நான் சந்திரமதியாகவும் அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை அரிச்சந்திரனாகவும் நடித்துள்ளோம். இவ் இரண்டு நாடகங்களும் யாழ். பெருமாள் கோவிலடி தமிழ் கலை மன்றத்தினரால் ஒரே மேடையில் போட்டி நிகழ் வாக நடைபெற்றது. இதில் இரண்டு நாடக ங்களுக்கும் நூற்றுக்கு நூறு புள்ளிகள் வழங்கப்பெற்று இரண்டையுமே சமமாக தீர்ப்பு வழங்கினார்கள். இச் சம்பவம் என்னா லும் எங்கள் மன்றத்தினராலும் மறக்க முடியாத ஒரு சம்பவமாகவே உள்ளது.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/அம்பிகை வித்தியாலயத்தில் தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் அவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்த ஆசிரியர் திரு.பா.செல்வகுமார் அவர்களையும் மற்றும் அதிபர் திரு.க.தெய்வராசா அவர்களையும் சக ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சித்தியடைந்தோர்**

நந்தகுமார் நிலாஜினி- 194 - மாவட்ட நிலை- 4
சசிகரன் பகிர்தன்- 178
ரஞ்சிதராசா அமுதினி- 172
சசிதரன் கலையிசையன்-170
கிருபாகரன் அபிநயா- 166
ராஜ்குமார் தமிழ்நிலவன்-165

அத்துடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 26 மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம், கிளி/அம்பிகை வித்தியாலயம்.

## ஏல விற்பனை அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை-சுன்னாகம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மருதனார்மடம் சந்தை வளாகத்தில் உள்ள கீழ்வரும் மரங்கள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

மரங்களின் விபரம் : பலாமரம் - 01, அசோகாமரம் - 01
காலம் : 25.10.2018 வியாழக்கிழமை காலை 10.00 மணி
இடம் : பிரதேச சபை தலைமை அலுவலகம்

நிபந்தனைகள் :

01. ஏலதாரராகக் கலந்து கொள்பவர் ரூபா. 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப் பணமாகச் செலுத்த வேண்டும்.
02. சித்தியடைந்த ஏலதாரர் ஒப்புக் கொண்ட ஏலத் தொகையின் முழுத் தொகையினையும் செலுத்தி ஒரு வாரத்திற்குள் மரங்களை அகற்றுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் 021 224 0017
க.தர்சன், தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
(சி-4168)

## 31 ஆம் நாளில் நினைவுகூருகின்றோம்

அமரர் **செல்வி பரிமளாதேவி அம்பலவாணர்**

(எமது பாடசாலையில் 17 வருடங்கள் ஆங்கில ஆசிரியராக சேவையாற்றிய ஓய்வு நிலை ஆசிரியர்)



குடும்பத்தின் குல விளக்காக
குணத்திலே குன்றாக
அன்புச் சிறார்களுக்கு
அறிவுப் பசி போக்கி
ஒழுக்கமும் கல்வியும்
இரு கண்களென
மாணவ சமுதாயத்தை
மாண்புடன் நடக்க வைத்த
ஆசானின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம்.
(5800)

# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

01.01.2019 முதல் 31.12.2019 வரை மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், களஞ்சிய அறைகள், பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்-2019

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 18.10.2018–31.10.2018 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 01.11.2018 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 01.11.2018 மு.ப 10.30 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம் | 10,577,100.00 | 105,800.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1,497,700.00 | 15,000.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 924,960.00 | 9,200.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,261,500.00 | 12,600.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 78,200.00 | 800.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 67,200.00 | 700.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 01 | 36,400.00 | 500.00 | 750.00 |
| 08 | களஞ்சிய அறை இல - 02 | 34,700.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 11,900.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 16,500.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 16,500.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 16,500.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 113,200.00 | 1,100.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 7,790.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 15 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 188,670.00 | 1,900.00 | 750.00 |
| 16 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 220,600.00 | 2,200.00 | 750.00 |
| 17 | கைதடி பொதுச்சந்தை | 17,955.00 | 500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 18 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 323,040.00 | 3,200.00 | 750.00 |
| 19 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 61,275.00 | 600.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 44,000.00 | 500.00 | 750.00 |
| 21 | மிருசுவில் பொதுச்சந்தை | 5,000.00 | 500.00 | 750.00 |
| 22 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 20, 900.00 | 500.00 | 750.00 |
| 23 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 5,400.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 24 | நாவற்குழி பொதுச்சந்தை | 3,300.00 | 500.00 | 750.00 |
| 25 | நாவற்குழி மீன் சந்தை | 3,300.00 | 500.00 | 750.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 18.10.2018 தொடக்கம் 31.10.2018 வரையான காலப் பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. 01.11.2018 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளுக்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டுவரப்படல் வேண்டும். அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒருவார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொருமாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். 18.10.2018
(சி-4167)




# ராஜீவ் கொலை விவகாரம்

# பேரறிவாளன் உட்பட 7 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்

## ஆளுநருக்கு தா.பாண்டியன் கோரிக்கை



(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 28 ஆண்டுகளாக சிறையில் இருந்து வரும் பேரறிவாளன் உட்பட 7 கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சிரேஷ்ட நிர்வாகியும், முன்னாள் எம்.பியுமான தா.பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஆளுநருக்கு அனுப்பிய மனுவில் கூறியிருப்பதாவது,

1991ஆம் ஆண்டு நடந்த தேர்தலின்போது இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றிருந்தது. அந்த சமயத்தில் பிரசாரம் மேற்கொள்ள ஸ்ரீபெரும்புதூர் வந்த ராஜீவ்காந்தியுடன் நானும் சென்றிருந்தேன்.

மிகவும் கவலை தரக்கூடிய அந்த சம்பவத்தில் சிக்கிய நானும் பலத்த காயம் அடைந்தேன். இதைத்தொடர்ந்து ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 47ஆவது சாட்சியாக சேர்க்கப்பட்டேன்.

இந்த தாக்குதலில் இருந்து தப்பியபோதிலும் உளவியல் ரீதியாக அதில் இருந்து விடுபட எனக்கு பல ஆண்டுகள் ஆனது. இது ஒரு முக்கியமான வழக்காக இருந்தபோதிலும் சில முக்கிய முடிவுகளை எடுப்பதில் இருந்து சி.பி.ஐ. கடந்து சென்றதாக கருதுகிறேன்.


இந்த வழக்கில் குற்றவாளிகளில் ஒருவரான பேரறிவாளன் வெடிகுண்டை வெடிக்க செய்வதற்காக பயன்படுத்திய பற்றரியை வாங்கி கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டார்.

ஆனால், பேரறிவாளனின் வாக்குமூலத்தை முறையாக பதிவு செய்யாததன் விளைவு அவர் தண்டிக்கப்பட்டார். இதை சி.பி.ஐ. விசாரணை அதிகாரிகளில் ஒருவரான தியாகராஜன் பின்னாளில் தெரிவித்துள்ளார்.

பேரறிவாளன் மீது இந்த வழக்கை தவிர வேறு எந்த குற்ற வழக்கும் கிடையாது. ஆயுள் தண்டனைக்கான கா்லத்தை விட அதிக காலம் அவர்கள் 7 பேரும் சிறையில் இருந்து விட்டனர். 28 ஆண்டுகள் அவர்கள் சிறையில் இருந்ததை போதுமானதாக கருத வேண்டும்.

உங்களது கையெழுத்தில்தான் அவர்களது விடுதலை உள்ளது. எனவே, மீதமுள்ள காலத்தை அமைதி யான முறையில் கழித்திட மனிதாபிமான அடிப்படையில் அவர்களை விடுவிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (7)

# சபரிமலையில் நீடிக்கும் பதற்றம் நிலக்கல்லடியில் பொலிஸார் குவிப்பு



(கேரளா)

கேரளாவில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்குள், 55 வயதிற்கு உட்பட்ட பெண்கள் செல்லக் கூடாது எனக் கோரி, ஆலயத்திற்கு செல்லும் வழியில் போராட்டம்நடத்திவருவோரை, பொலிஸார் அப்புறப்படுத்தி வருகின்றனர்.

சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு அனைவரும் செல்லலாம் என்று, உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னர், ஆலயத்திற்குள் பெண்கள் செல்லக் கூடாது எனக் கோரி, ஆலய நிலக்கல்லடியில் நின்ற ஆர்ப்பாட்டகாரர்கள், ஆலயத்திற்த செல்லும் பெண் களை தடுத்து நிறுத்தி போரா ட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், உச்ச நீதி மன்றின் தீர்ப்பை மதிக்காது செயற்படும் ஆர்ப்பாட்டக்காரர்களை அவ்விடத்திலிருந்துகலைக்கவும், அத்துமீறுபவர்களை கைது செய்யவும், சபரிமலை நிலக்கல்லடியில் 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (7)

# புகழ்பெற்ற கோஹினூர் வைரம் இங்கிலாந்து ராணியிடம் சென்றது எப்படி?

## தொல்லியற்றுறை தகவல்



(டில்லி)

தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ், கோஹினூர் வைரம் இங்கிலாந்து ராணியிடம் சென்றது எப்படி என்பது தொடர்பாக தொல்லியல் துறை தகவல் அளித்துள்ளது.

புகழ்பெற்ற கோஹினூர் வைரம், 14ஆம் நூற் றாண்டில் தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்டது. அது, 108 கரட் கொண்டது. அளவில் மிகப்பெரியது. எந்த நிறமும் இல்லாதது. அதன் மதிப்பு 20 கோடி டொலர் (ரூ.1,480 கோடி) என்று மதிப்பிடப்பட்டு உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், அந்த வைரம், ஆங்கிலேயர்கள் கைக்கு சென்றது. தற்போது, இங்கிலாந்தில் உள்ள ஒரு அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. கோஹினூர் வைரத்துக்கு இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள் சொந்தம் கொண்டாடி வருகின்றன.

இந்நிலையில், அந்த வைரம் இங்கிலாந்திடம் சென்றது எப்படி? என்று பிரதமர் அலுவலகம் தகவல் அளிக்க வேண்டும் என்று கேட்டு, தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ், பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த ரோகித் சபர்வால் என்பவர் விண்ணப்பித்தார். அதற்கு இந்திய தொல்லியல் துறை பதில் அளித்துள்ளது.

அதில், "டில்லியில் உள்ள தேசிய ஆவண காப்பகத்தில் உள்ள ஆவணங்களின்படி, டல்ஹவுசி பிரபுவுக்கும், லாகூர் மகாராஜா துலீப் சிங்குக்கும் இடையே 1849 ஆம் ஆண்டு லாகூர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி, இங்கிலாந்து ராணியிடம் மகாராஜா கோஹினூர் வைரத்தை ஒப்படைத்தார்" என்று கூறப்பட்டுள்ளது. (7)

# சோமாலியா தலைநகர் ...

# அமெரிக்க இராணுவ...

## 65 பயங்கரவாதிக...



(மொகாடிஷு)

சோமாலியா நாட்டின் தலைநகர் மொகாடிஷீ அருகே தீவிரவாதிகள் முகாம் மீது அமெரிக்க ராணுவம் நேற்று முன்தினம் நடத்திய வான் வழி தாக்குதலில் 65 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா

# சவுதி ஊடகவியலாளர் ...

# பாரபட்சமற்ற விசாரணை...

## ஐ.நா.சிரேஷ்ட அதிகா...

(ஜெனீவா)

சவுதி ஊடகவியலாளர் கசோக்கி மாயமானது தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை வேண்டும் என்று ஐ.நா. சிரேஷ்ட அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின் ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி (வயது 59).

இந்த நிலையில் அவர் அண்மையில் துருக்கி நாட்டுக்கு சென்றார். அங்கு இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபிய துணை தூதரகத்துக்கு கடந்த 2ஆம் திகதி சென்ற அவர், மாயம் ஆனார்.

அவர் அந்த தூதரகத்துக்குள் வைத்து சவுதி அரேபிய முகவர்களால் கொல்லப்பட்டு விட்டார் என்று பல தரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இதுவரை சவுதி அரேபியா மறுத்து வருகிறது. இது ஆதாரமற்றது, தவறா

னது என...
கூறுகிற...
அமெ...
எச்சரிக்...
வியலாள...
ஆனது ...
விசாரணை...
இத்...
ஜமால்...
நடந்தது...
அரேபிய...
வேண்...
உரிமை...

# பாகிஸ்தானில் சிறுமி படுகொலை

## குற்றவாளிக்கு மரணதண்டனை நிறைவேற்றம்





(லாகூர்)

ஆறு வயது சிறுமி ஜைனாப் அன்சாரியை பாலியல் துஷ்பிரயோகத்தின் பின்னர் கொலை செய்த நபரிற்கு பாகிஸ்தான் நேற்று தூக்குதண்டனையை நிறைவேற்றியுள்ளது.

பாகிஸ்தானை பலத்த அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஜைனாப் கொலைக்குற்றவாளி இம்ரான் அலிக்கு லாகூரில் உள்ள நீதிமன்றத்தில்நேற்று தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர் கருத்து தெரிவித்துள்ள ஜைனாப்பின் தந்தை தான் திருப்தியடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அவரின் மரணத்தை நான் கண்ணால் பார்த்தேன் என அமின் அன்சாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை எனது மகளின் மரணத்திற்கு காரணமானவரிற்கு மரணதண்டனை தொலைக்காட்சியில் ஒலிபரப்பவில்லை என்பதே எனது கவலை எனவும் ஜைனாப்பின் தந்தை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கசூர் நகரில் பெற்றோருடன் உறங்கிக் கொண்டிருந்த ஜைனாப் அன்சாரி காணாமல்போன பின்னர் நான்கு நாட்களிற்கு பின்னர் குப்பைதொட்டியொன்றில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ள காட்சிகளை அடிப்படையாக வைத்து 24 வயது இம்ரான் அலி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# அமெரிக்...

# அவுஸ்தி...

# ஜெருசே...

## பிரதமர் ஸ்...



(கான்பெர்ரா)

அமெரிக்காவை பின்பற்றி அவுஸ்திரேலியாவும் இஸ்ரேல் தலைநகரான ஜெருசலேமை அங்கீகரிக்கவும், தனது தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு... றது.

கிறி... மியர்க... புனித ந...

# வெளிநாடு



# கர் தீவிரவாதிகள் முகாம் மீது
# வம் வான்வழித்தாக்குதல்

## திகள் உயிரிழப்பு



ஆதரவு பெற்ற உள்நாட்டு பயங்கரவாதிகளான அல் ஷபாப் குழுக்கள் ஏராளமாக இயங்கி வருகின்றன. சோமாலியா அரசை கவிழ்த்துவிட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாக உள்ளது.

உள்நாட்டு ராணுவ வீரர்கள் மீது அவ்வப்போது அதிரடியாக தாக்குதல் நடத்திவரும் இந்த பயங்கரவாதிகள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுவரும் பன்னாட்டு அமைதிப் படையினரையும் கொன்று குவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 65 பயங்கரவாதிகள் உயிரிழந்துள்ளனர். (7)

# ளர் மாயமானது தொடர்பாக
# ரணை நடத்தப்பட வேண்டும்

## காரி வலியுறுத்து



னது என அந்த நாடு திட்டவட்டமாக கூறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் எச்சரிக்கையைத் தொடர்ந்து ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி மாயம் ஆனது தொடர்பாக மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு மத்தியில் ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி விவகாரத்தில் நடந்தது என்ன என்பது பற்றி சவுதி அரேபியாவும், துருக்கியும் தெரிவிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் மிச்செல்லி பசேலெட் வலியுறுத்தி உள்ளார். மேலும், ஊடகவியலாளர் மாயம் ஆனது தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (7)

# க்காவை பின்பற்றி
# திரேலிய தூதரகம்
# லேமுக்கு மாற்றம்

## ஸ்காட் அறிவிப்பு



நகருக்கு மாற்றவும் பரிசீலித்து வருகிறது.

கிறிஸ்தவர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் என 3 மதத்தினருக்கும் புனித நகரமாக திகழக்கூடிய ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்து கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு வெளியிட்டார். இது உலகளாவிய எதிர்ப்புக்கு வழிவகுத்தது.

ஆனாலும், அடுத்த கட்டமாக கடந்த மே மாதம், ஜெருசலேம் நகரில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவை பின்பற்றி அவுஸ்திரேலியாவும் இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்கவும், தனது தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றவும் பரிசீலித்து வருகிறது.

இதை அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரீசன் அறிவித்தார். மேலும், ஈரான் அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு அளித்து வருகிற ஆதரவை மறுபரிசீலனை செய்யவும் முடிவு செய்துள்ளது. இதையும் பிரதமர் ஸ்காட் மோரீசன் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் அவுஸ்திரேலியா ஒரு தரப்பினராக கையெழுத்திடாதபோதும், இப்போது தனது ஆதரவை வாபஸ் பெற்றால் அது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு சாதகமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா, மேற்கத்திய நாடுகளின் ஆதரவை இதில் எதிர்பார்க்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## சவுதி ஊடகவியலாளர் மாயம்

# மன்னர் முகமது பின் சல்மானுடன் அமெ. அமைச்சர் போம்பியோ சந்திப்பு



(ரியாத்)

சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி (வயது 59). இந்த நிலையில் அவர் அண்மையில் துருக்கி நாட்டுக்கு சென்றார். அங்கு இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபிய துணை தூதரகத்துக்கு கடந்த 2ஆம் திகதி சென்ற அவர், மாயம் ஆனார்.

அவர் அந்த தூதரகத்துக்குள் வைத்து சவுதி அரேபிய மூவர்களால் கொல்லப்பட்டு விட்டார் என்று பல தரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இதுவரை சவுதி அரேபியா மறுத்து வருகிறது. இது ஆதாரமற்றது. தவறானது என அந்த நாடு திட்டவட்டமாக கூறுகிறது.

ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி சவுதி அரேபியாவால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்தார்.

அதைத் தொடர்ந்து ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி மாயம் ஆனது தொடர்பாக மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். இதற்கிடையே சவுதி அரேபிய அதிகாரிகளின் அனுமதி பெற்று, துருக்கி பொலிஸ் அதிகாரிகள் இஸ்தான்புல் துணைத்தூதரகத்துக்கு சென்று விசாரணை நடத்தினார்கள்.

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், சவுதி அரேபிய மன்னர் சல் மானை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அதைத் தொடர்ந்து டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார்.

அந்தப் பதிவில் அவர், "சவுதி மன்னரை தொடர்பு கொண்டு பேசினேன். அவர், எங்கள் சவுதி அரேபிய குடிமகனுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்கிறார். அவர் இந்தப் பிரச்சினையில் விடை காண்பதற்கு துருக்கியுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக தெரிவித்தார். மன்னரை சந்தித்துப் பேசுவதற்காக வெளியுறவு அமைச்சரை அங்கு (சவுதி அரேபியா) உடனே அனுப்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி அவர் வெளியுறவு அமைச்சர் மைக் போம்பி யோவை சவுதி அரேபியா அனுப்பினார்.

நேற்று முன்தினம் ரியாத் போய்ச் சேர்ந்த மைக் போம்பியோ, சவுதி மன்னர் சல்மானை சந்தித்துப் பேசினார். ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி மாயம் ஆனது பற்றி இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர். பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானையும் மைக் போம்பியோ சந்தித்து விட்டு துருக்கி நாட்டுக்கு சென்றார்.

இதற்கு மத்தியில் ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி விவகாரத்தில் நடந்தது என்ன என்பது பற்றி சவுதி அரேபியாவும், துருக்கியும் தெரிவிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் மிச்செல்லி பசேலெட் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் ஜமால் கசோக்கி கொலை செய்யப்பட்டுள்ளதாக துருக்கி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# 98 வயது தோழியை மனைவிக்கு அறிமுகம் செய்த இளவரசர் ஹரி



(சிட்னி)

இளவரசர் ஹரி தனது மனைவி மேகன் மார்கலுடன் அவுஸ்திரேலியா சென்றார். அங்கு தனது 98 வயது தோழியை சிட்னியில் உள்ள இல்லத்தில் சந்தித்தார்.

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் - டயானா தம்பதியின் 2ஆவது மகன் ஹரி. இவருக்கும் அமெரிக்க நடிகை மேகன் மார்கலுக்கும் திருமணம் நடந்தது. தற்போது மேகன் கர்ப்பமாக இருக்கிறார்.

இந்த நிலையில் இளவரசர் ஹரி தனது மனைவி மேகன் மார்கலுடன் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா சென்றார். அங்கு தனது 98 வயது தோழி டாப்னே துனே என்பவரை சிட்னியில் உள்ள ஒபரே இல்லத்தில் சந்தித்தார்.

இவரை இளவரசர் ஹரி கடந்த 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில்அவுஸ்திரேலியா சென்றபோது சந்தித்தார். அப்போது ஏற்பட்ட பழக்கம் அவர்களுக்கு இடையே நட்பாக மாறியது.

இச்சந்திப்பின் போது தனது மனைவி மேகனை தோழி துனேவுக்கு ஹரி அறிமுகம் செய்து வைத்தார். அப்போது மேகனை துனே கட்டி தழுவி வாழ்த்தி ஆசி வழங்கினார்.

இளவரசி மேகன் கர்ப்பமாக இருக்கும் செய்தி அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாக துனே கூறினார். அதற்கு மேகன் நன்றி கூறினார்.

அவரிடம் விடை பெற்ற போது ஹரியும் மேகனும் அவருக்கு முத்தமிட்டனர். (7)

# பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண 5 ஆயிரம் ரூபா தாளை இரத்துச் செய்க

## அரசிடம் நீதியான சமூகத்துக்கான தேசிய அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாக 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை இரத்துச் செய்யுமாறு நீதியான சமூகத்துக்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சரத் விஜேசூரிய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அவ்வமைப்பின் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெறும் பொருளாதார நெருக்கடிக்கு இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு வரையறை இடுவதை விடவும், அரசாங்கத்திலுள்ள அரசியல் வாதிகள் முன்னெடுக்கும் பாரிய செலவிலான விழாக்களையும் நிகழ்வுகளையும் நிறுத்துவதுதான் மிகவும் பொருத்தமான நடவடிக்கையாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

என்.எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சீர்செய்வதற்கு அன்றிருந்த 50 ரூபா மற்றும் 100 ரூபா நாணயத் தாள்களை இரத்துச் செய்யத் தீர்மானித்தார். இதனால் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவர முடிந்தது.

இதேபோன்று, இன்றும் 5000 ரூபா நாணயத்தாளை இரத்துச் செய்வதன் ஊடாக கடந்த காலத்தில் அடைந்து கொண்ட நன்மையை விடவும் தற்காலத்தில் பயன்கள் அதிகமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு முறைகளில் சட்ட முரணான விதத்தில் பணத்தை பதுக்கி வைத்திருப்பது தொடர்பில் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. சில அரசியல்வாதிகளிடம் உள்ள 5000 ரூபா நாணயத் தாள்கள் நிரப்பிய பொதிகள் விகாரைகளிலும், கொள்கலன்களிலும் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் விஜேசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பொலிஸ்மா அதிபர் பூஜித பலமுள்ளவர் கூட்டு எதிரணிக்கு அதுதான் பிரச்சினை

## பிரதியமைச்சர் நளின் பண்டார விளக்கம்






(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர பலமுள்ளவராக இருப்பதனாலேயே கூட்டு எதிர்க்கட்சி அவரை நீக்கிவிட இவ்வளவு பெரிய பிரயத்தனங்களை முன்னெடுக்கின்றது என பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ்மா அதிபர் பலவீனமானவராக இருந்தால் நாட்டில் சட்டம் ஒழுங்கு பலவீனப்படுத்தப்பட்டிருக்கும். அப்போது அது எதிர்க்கட்சிக்கே சாதகமானதாக இருக்கும். அவ்வாறு இருக்கும் ஒருவரைப் பற்றி அவர்கள் அலட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். பலம் குறைந்த பொலிஸ்மா அதிபர் அரசாங்கத்தின் மதிப்பை இல்லாமற் செய்யலாம்.

எனவேதான் கூட்டு எதிரணியினருக்கு இந்தப் பொலிஸ்மா அதிபர் பிரச்சினையாகத் தெரிகின்றார். அங்கு ஏதோ ஒரு அரசியல் இலாபம் இருக்கின்றது எனவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுமட்டுமல்லாமல், ஊழல் மோசடி விசாரணைப் பிரிவு, குற்றத் தடுப்பு விசாரணைப்பிரிவு மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான உயர் நீதிமன்றங்களையும் அப்புறப்படுத்த வேண்டும் என்றே கூட்டு எதிரணியினர் கூறிவருவதாகவும் பிரதியமைச்சர் நளின் பண்டார மேலும் தெரிவித்தார். (இ-7)

## சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட

# பொலிஸ் கான்ஸ்டபிள் குணவர்த்தனவுக்கு ஜனாதிபதி 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி

(கொழும்பு)



அண்மையில் தெபுவன பிரதேசத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய நிகழ்வு தொடர்பில் தற்காலிகமாக சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் சனத் குணவர்த்தன நேற்று முன்தினம் நண்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

அவர் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அவரது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு ஜனாதிபதி 10 இலட்சம் ரூபா நிதியுதவியை இதன்போது வழங்கினார். (இ-7)





யாழ்.கோண்டாவில் நாராயணா சனசமூக நிலையத்தினால் கிராமத்திலுள்ள ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இன்று ஒரு தகவல்

### கேவலப்படுத்தும் கேள்விகள்

கேள்வி கேட்டே கேவலப்படுத்துகிறவர்கள் உண்டு. இவர்கள் சிலரது அறியாமையைப் பலர் முன் வெளிப்படுத்தும் விதமாக “என்ன இதைக் கூடத் தெரிஞ்சுக்காம இருக்கீங்க?” என்கிறார்கள்.

“உங்களால் இந்த வேலையை முடிக்க முடியுமா?” என்று வெறுப்பு ஏற்றுகிறார்கள்.

வேறு சிலர் பிறரது பொருளாதார இயலாமைகளை போட்டு உடைக்கும் பாணியில் “அதுக்கெல்லாம் நீ ஆசைப்படலாமா?” என்கிறார்கள்.

ஆர்வமாக செயற்பட முன் வருகிறவர்களிடம் “உனக்கெதற்கு இந்த வீண் வேலை?”

புடைவைக் கடையில் சற்று காஸ்ட்லி புடைவையாகப் பார்த்தால் “நீங்க ஏம்மா அதையெல்லாம் பார்க்குறீங்க?” என்கிறார்கள்.

“இவனா உங்க பையன்? ஆனா அழகாக இருக்கிறானே!” என்று மட்டம் தட்டுகிறவர்களும் உண்டு.

தங்கள் கேள்விகளால் மற்றவர்களைக் கீழே இறக்கிப் பார்க்க எண்ணுகிறவர்கள் பாதிக்கப்படுகிறவர்களின் மனநிலை பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை.

நன்றாக பேசிக்கொண்டிருக்கும் எதிராளி இத்தகைய ஒரு கேள்வியால் மனம் சுருண்டு போகிறான் என்பது இவர்களுக்குத் தெரியவில்லை.

ஒருவேளை நீங்கள் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது என்று மூன்றாவது மனிதர் சுட்டிக்காட்டினால் கூட “சும்மா யதார்த்தமாகக் கேட்டேன்! இது தப்பா என்கிறார்கள்.

உடையவர்களே உங்கள் கேள்வி என்னைக் காயப்படுத்தி விட்டது என்று சுட்டிக்காட்டினால் “என்னப்பா! சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டேன். இதைப் போய்த் தப்பா எடுத்துக் கிட்டியே!” என்று தங்கள் தவறை உணராமல் தொடர்கிறார்கள்.

எல்லோருக்கும் இயலாமைகளும் அறியாமைகளும் இருக்கின்றன. அவற்றை நாகரிகமாகக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதே நல்லது. எவரையும் கேள்விக் கணைகளால் காயப்படுத்துவது நியாயமாகாது.

இவர்கள் தங்கள் குணத்தை மாற்றிக்கொள்ளாவிட்டால் நாக்கை பிடுங்கிக் கொள்கிற மாதிரியான நான்கு கேள்விகளுக்கேனும் இவர்கள் பதில் சொல்ல வேண்டிய காலம் வந்தே தீரும்.

லேனா தமிழ்வாணன்

# வழக்கு விசாரணைகளைத் திசை திருப்பவே இடைக்கால அரசு குறித்து பேசி வருகின்றனர்

## கூட்டு எதிரணியை நோக்கி அஸாத் சாலி



(கொழும்பு)

பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளை திசை திருப்பும் திட்டத்திலேயே கூட்டு எதிர்க் கட்சியினர் இடைக்கால அரசாங்கம் தொடர்பில் பேசி வருகின்றனர்.

விசேட நீதி மன்றங்களில் இவர்களுக்கு எதிரான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படும் போது அவர்களின் நிலையை அறிந்து கொள்ளலாம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அஸாத் சாலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியில் இருக்கும் அதிகமானவர்களுக்கு எதிராக விசேட நீதிமன்றங்களில் வழக்கு விசார ணைகளுக்கு திகதி குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

வழக்கு விசாரணைகளுக்கு முகம்கொடுப்பதற்கு அஞ்சியே தற்போது இவர்கள் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்போவதாக தெரிவித்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளை திசை திருப்ப முயற்சித்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



தேசிய மீலாத் விழா (2018) போட்டிகளில் ஆரம்பப் பிரிவில் கஸீதா போட்டியில் தேசிய ரீதியில் யாழ்.ஒஸ்மானியா கல்லூரி இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. கல்லூரி அதியர் எம். சேகுராஸிது, ஆசியர்கள் ஏ.ரிஸானாபர்வின், எம்.ஏ.பைஸர் மௌலவி, எம்.எம். ஹிமாஸ் ஆகியோர்களின் வழிநடத்தலில் எம். என். எப். நுஹா,எம்.எம் எப். அஸ்மா,எம்.ஏ.எப். ஸமீஹா, எம்.எஸ்.எப். ஸம்ஹா,எம். இஸட்.எப். ஸஹ்னா, எம்.ஏ.அஸ்னா பர்வின் ஆகிய மாணவிகள் கஸீதா போட்டியில் கலந்து தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளனர்.

## குழுமோதல் குற்றச்சாட்டில் கைதான

# பிரதேச சபை உறுப்பினர் உட்பட ஆறு பேருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

குழு மோதலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் உட்பட 6 பேரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

ஏழாலை மகா வித்தியாலய சூழலில் நின்ற கும்பல் ஒன்று சகோதரர்கள் இருவரை இரும்புக் கம்பிகளால் தாக்கியது என்று தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. சம்பவத்தில் செ.அரவிந்தன் (வயது-25), செ.சஜீவன் (வயது -19) ஆகிய சகோதரர்கள் இருவரே படுகாயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.


இந்த மோதல் சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் லகிந்தனும் தனியான முறைப்பாடு ஒன்றை தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் செய்துள்ளார்.

இருதரப்பு முறைப்பாடுகளையும் ஏற்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், வலி. தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.லகிந்தன் மற்றும் அவரது நண்பர்கள் மூவர் காயமடைந்தவர்களில் ஒருவர் மற்றும் அவரது நண்பர் என 6 பேரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் 6 பேரும் மல்லாகம் நீதவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மல்லாகம் நீதிமன்ற நீதவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, சந்தேகநபர்கள் 6 பேரையும் வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-9)

# 65 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளுடன் ஒருவர் கைது!



(கொழும்பு)

ஆடைக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து ஒரு கிலோ 200 கிராம் தங்க நகைகளை கடத்த முயன்ற ஒருவரை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவிலிருந்து சிங்கப்பூருடாக இலங்கைக்கு பிரவேசிக்கவிருந்த நிலையிலேயே சுங்கப் பிரிவு அதிகாரிகள் இவரை கைது செய்துள்ளனர். இவரிடமிருந்து 65 தங்க மாலைகள் மற்றும் 6 வளையல்கள் உட்பட பெருமளவிலான நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி சுமார் 65 இலட்சம் ரூபாவாகும் எனத் தெரிவித்த சுங்கப் பிரிவு அதிகாரிகள் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)





யாழ்.சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையில் சர்வதேச ஆசிரியர் தினம் அண்மையில் இடம் பெற்றது.

அதிபர் க.கார்த்திகேயன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கலைவாணி முன்பள்ளி செயற்குழு தலைவர் செ.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 100 | 100 | 160 | 120 |
| தக்காளி | 100 | 60 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 35 | 50 | 50 | 40 |
| கோவா | 120 | 50 | 120 | 120 | 130 |
| கரட் | 150 | 130 | 200 | 240 | 200 |
| பூசணி | 50 | 35 | 50 | 80 | 40 |
| புடோல் | 150 | 80 | 80 | 120 | 150 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 | 60-120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 110 |
| பாகற்காய் | 160 | 140 | 200 | 240 | 260 |
| வெண்டிக்காய் | 120 | 70 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50. | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 150 | 100 | 160 | 160 | 180 |
| லீக்ஸ் | 80 | 60 | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 50 | 55 | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | 150 | 80 | 200 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 120 | 160 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 280 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | — | 80 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 240 | 275 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50-55 | 30-50 | 60 |
| இராசவள்ளி | 140 | 120 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 240 | 160 | 140 |
| முள்ளங்கி | 40 | 30 | 60 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 50 | 20 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 60 | 110 | 50 | 80 | 80 |

# ஜோன்ஸ்டன் விடுதலை

(கொழும்பு)

நிதி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட 3 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கு குருநாகல் மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கைத் தொடர்ந்து விசாரிப்பதற்கு போதிய சாட்சி இல்லாமை மற்றும் வழக்கின் உறுதியற்ற தன்மை காரணமாக இவர்களை விடுதலை செய்வதற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். சதொச நிறுவனத்திற்கு சொந்தமான 5 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நடைபாதை வியாபாரத்தை முற்றாகத் தடை செய்யவும்

(கரணவாய்)

வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரத்தை முற்றாகத் தடை செய்யுமாறு நெல்லியடி வாணிபர் கழகத்தினர் தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் தவிசாளருக்கு அறிவித்திருந்த போதும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தற்போது பண்டிகை அண்மித்த காலங்களில் புதிய சந்தையின் சுற்றுவட்டப்பாதை பகுதிகளில் மேற்கொள்வதற்கு பிர்தேச சபையால் அனுமதி வழங்கப்படுகிறது.

இதனால் நிரந்தர வர்த்தகர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ள வாணிபர் கழகத் தினர் குறித்த நடைபாதை வியாபாரத்தினை முற்றாக தடை செய்யுமாறு தவிசாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குகடிதம்மூலம்கோரிக்கை விடுத்தள்ளனர். (இ-9-60)

## அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதியைச் சேர்ந்த சிவகுருநாதன் சிறிரங்கள் (752791538V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் வலம்புரிக்காரியாலத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (இ)

# குமார வெல்கமவின் வாயை மூட மகிந்த சமிக்ஞை-நளின் தகவல்

(கொழும்பு)

கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் மகிந்த ராஜபக்ஷவின் சம்மதத்துடன் இடம்பெற்றவையே எனவும், இவை ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்வீட்டுப் பிரச்சினையையே எடுத்துக் காட்டுவதாகவும் பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தெரிவித்திருந்த கருத்துக் குறித்து நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்தானந்த அளுத்கமகே, திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்த ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷ மேடையில் வீற்றிருக்கையில், குமார வெல்கமவைத் திட்டித் தீர்த்தனர். (இ-7)

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு உழவு இயந்திரப் பெட்டி, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி மற்றும் உபகரணங்கள், உடுப்புக்கள், அலுவலக இலத்திரனியல் சாதனங்கள், மணல் போன்றன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனை தொடர்பான பொருட்களின் விபரத்தினை 05.10.2018 ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம் என பதிவாளர் அறிவித்துள்ளார்.(இ)






யாழ். உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இதில் அதிபர், ஆசிரியர்களை மாணவர்கள், பெற்றோர்கள் மாலை அணிவித்து கௌரவப்படுத்தினர்.

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 8 (சனி)

## (நீதிமான்)


**8 ஆம் எண்காரர்களின் அதிர்ஷ்டக் கையெழுத்து**

இவர்கள் தங்கள் பெயருக்கு அடுத்தபடியாக தாங்கள் இடும் கையெழுத்தையும் அதிர்ஷ்டமானதாக மாற்றிக்கொள்ள வேண்டும். வலப்புறச் சுழியுடன் மேல் நோக்கி ஆரம்பித்து சனி ஆதிக்க எழுத்துக்கள் கம்பீரமாக தலை நிமிர்ந்த வண்ணம் இடும் கையெழுத்து சிறந்த நிர்வாகத் திறனையும் பல பேரை கட்டியாளும் திறனையும் பெரும் செல்வத்தைத் திடீரென்று பெற்றுத் தரும் அமைப்பையும் உருவாக்கும். அனைவருக்கும் அனைத்திற்கும் தலைமை தாங்கும் நிலையை உருவாக்கும். 19 டிகிரி சாய்வுக் கோணத்துடன் 6 செ.மீ. நீளத்திற்குள் அமைக்க வேண்டும். புள்ளிக்கோடுகள் கையெழுத்தில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கீழ்நோக்கிய குறியீட்டால் வீண் விரையங்கள் கட்டுக்கடங்காமல் வந்து கொண்டேயிருக்கும். அடிமைத் தனமான வாழ்க்கை அமையும். கடனாளியாக்கும். சனி ஆதிக்க எழுத்தை கையெழுத்தில் மற்ற எழுத்துக்களைக் காட்டிலும் எக்காரணம் கொண்டும் கீழே இழுத்துப் போடக்கூடாது. சனி ஆதிக்க எழுத்தை கம்பீரமாகக் குறியிட வேண்டும். குடும்பப் பிரச்சினைகள், மன நோய்கள், கடன் தொல்லைகள், வீண் வாக்கு வாதங்கள், விரையங்கள் தடுக்கப்படும். தொடர் தோல்விகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து வெற்றியான வாழ்க்கை அமைய வழிவகுக்கும். தீய எண்ணங்கள் மறையும். பிரபலமான வாழ்க்கை அமையும். மக்கள் மத்தியில் எழுச்சியுண்டாகும்.

**சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

**8 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

அமைதியான வாழ்க்கை வாழ விரும்புபவர்கள். பல காரியங்களைச் சாதிக்கத் துடிப்பார்கள். மதப் பிரசாரம், தெய்வ வழிபாடு, வேதாந்தம் போன்றவற்றில் ஈடுபாடு காட்டுவார்கள். உடலோ சுகத்தை விரும்பும். மனமோ தியாகத்தையும் துறவையும் விரும்பும். மன அமைதி இல்லாதவர்கள். பல கலைகள் கற்கும் ஆர்வம் மிக்கவர்கள். மற்றவர்களை விடவும் பகுத்தறிவுடையவர்கள். எந்நேரமும் சிந்தனையில் மூழ்கியிருப்பார்கள். தனிமையை அதிகம் விரும்புவார்கள். மற்றவருக்கு உதவி செய்யும் எண்ணமுடையவர்கள். பக்தியில் சிறந்து விளங்குவார்கள். சிறு காரியத்தையும் பலமுறை யோசித்தே செய்வார்கள். காரிய சித்தி உண்டாகும். கற்பனை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். ஆன்மீகத்தின் ஆணிவேரை காண முற்படுவார்கள். உலக ஞானம் அதிகமிருக்கும். எப்பேர்ப்பட்ட பெரிய காரியத்தையும் துணிச்சலுடன் செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். தனது கருத்துக்களை பிறர் மீது திணிப்பார்கள். சிலர் பணம் சேர்க்க குறுக்கு வழிகளை நாடுவார்கள். மனம் இருபுறமும் இழுக்கும். பாதி வயதிற்கு மேல்




சுகபோகத்தை வெறுத்து விடுவார்கள். கூட்டுச் சேருவதைவிட தனித்து நின்று வெற்றி பெறுவார்கள. பொதுவாழ்வில் புகழ் சேரும். ஓயாத உழைப்பால் உன்னத நிலையை அடைவார்கள். பிறர் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள். பொதுமக்களிடம் நல்ல மதிப்பு இருக்கும். இவர்களின் எண்ணங்கள் வித்தியாசமாக இருக்கும். பொதுக்காரியத்தில் அயராது உழைப்பார்கள். நன்மை செய்தால் நற்புகழ், புண்ணியம் உண்டாகும். தவறான வழியில் செல்பவர்களும் இவ்வெண்ணில் உள்ளார்கள். சட்டத்திற்குப் புறம்பான கடத்தல், போதை மருந்து, கொலை, கொள்ளை போன்ற தவறான தொழில் செய்து அரச தண்டனைக்கு ஆளாவார்கள். தவறான காரியத்திற்குத் தலைமை தாங்குவார்கள், தண்டனையும் பரிதாபத்திற்குரிய முடிவும் உண்டாகும்.

**17 ஆம் திகதி பிறந்தவர்களின குணாதிசயங்கள்**

பிறப்பில் சீமானாக இல்லாவிட்டாலும் சுய முயற்சியால் மிகப்பெரிய அந்தஸ்தான நிலைக்கு அறிவால் முன்னேறிவிடுவார்கள். இளமைக்காலம் போராட்டம் நிறைந்திருக்கும். வயது செல்லச் செல்ல உயர்ந்த நிலைக்கு வருவார்கள். எல்லான் கஷ்டங்களையும் மிகுந்த பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் அனுபவித்து முன்னேறுவார்கள். பிறருக்கு வளைந்து கொடுத்துப் பேசுவார்கள். கலைகளில் வெற்றியுண்டு. சரீர உடல் சுகங்களை இவர்கள் மனம் இடைவிடாமல் பெரிதும் நாடும். எதையும் தாங்கும் சக்தி படைத்தவர்கள். பிறருடைய பணம் எப்போதும் இவர்கள் கையில் புரண்டு கொண்டிருக்கும். பல கலைகளைக் கற்க விரும்புவார்கள். சுதந்திர மனம் உடைய இவர்கள் கருணையின் காவலாக இருப்பார்கள். பெரும் முயற்சிகள் செய்து பணம் சம்பாதித்து விடுவார்கள். எல்லாவிதமான சுகபோகங்களையும் அனுபவித்து வாழ்வார்கள். போகத்தைத் தொடர்ந்து அனுபவித்த வண்ணமிருப்பார்கள். பெரும் பணம் எப்போதும் சம்பாதிக்கத் திட்டம் தீட்டிக் கொண்டு இருப்பார்கள். சனி ஆதிக்கம் சரிந்தவர்கள். துணிந்து சட்ட விரோதமான காரியங்கவில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்க முற்படுவார்கள். மற்றவர்களை வஞ்சனை செய்வார்கள். பிறருக்குப் பெருத்த ஆசை காட்டிப் பெரும் பள்ளத்தில் தள்ளி விடுவார்கள். தீய வழியில் மோசடிகள் செய்து பெரும் பணம் ஈட்டுவார்கள். மற்றவர்கள் முன்பு கௌரவமாகக் காட்சியளித்தாலும் மன தில் கஞ்சத்தனம் அதிகமிருக்கும்.

(தொடரும்....)



யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகமானது இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பாரத ரத்னா அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு நினைவு நிகழ்வினை யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் அமைந்துள்ள இந்தியன் கோர்னர் பகுதியில் ஏற்பாடு செய்திருந்தது. இதில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன், சிரேஷ்ட நூலகர் திருமதி சுகந்தி சதாசிவமூர்த்தி மற்றும் நூலக அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் அப்துல்கலாம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து சிரேஷ்ட நூலகர் திருமதி சுகந்தி சதாசிவமூர்த்தி மற்றும் ஏனைய நூலக அலுவலர்கள், வாசகர்கள் எனப் பலரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## ஜனாதிபதி - இலங்கக்கோன் இடையே இரண்டரை மணிநேரம் இரகசிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. முன்னாள்பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுடன் இரகசிய சந்திப்பொன்றினை நடத்தியுள்ளார்.



ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் அவரை இவ்வாறு சந்தித்துள்ளதாகவும், இருவருக்கும் இடையே சுமார் இரண்டரை மணி நேரம் வரை கலந்துரையாடல் நீண்டதாகவும் உயர் மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

இருவருக்கும் இடையிலான கலந்துரையாடலில் என்ன பேசப்பட்டது என்பது குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் எவையும் வெளிப்படுத்தப்படாத போதும், தற்போதைய பொலிஸ்சேவை குறித்தும் பொலிஸ்மா அதிபரின் நடவடிக்கைகள் தொடர்பிலும் எழுந்துள்ள சர்ச்சைகள் மற்றும் பொலிஸார் மீதான நம்பகத்தன்மையை அதிகரிக்க முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் பொலிஸ் சேவையில் கடமையாற்றிய மிக நேர்மையான அதிகாரிகளில் ஒருவர் எனக் கருதப்படும் நிலையில் அவருக்கு அடுத்த பாதுகாப்பு செயலாளர் பதவி அல்லது புதிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைமைப் பதவியை வழங்குவது குறித்து ஜனாதிபதிக்கு விசேட அவதானம் உள்ளதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

மிக விரைவில் புதிய பாதுகாப்பு செயலர் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கைகளை முன்னெடுததுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில், அப்பதவிக்கான பெயர்ப்பட்டியலில் இதுவரை ஜனாதிபதி செயலணியின் பிரதானி ஹேமசிறி பெர்னாண்டோவின் பெயரே இருந்து வந்தது.

இந்நிலையில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் உயர் மட்டத்தில், அடுத்த பாதுகாப்புச் செயலர் பதவி இலங்கக்கோனுக்கு வழங்கப்படலாம் என்ற ரீதியிலும் தகவல்கள் கசிந்துள்ளன.

எனினும் புதிதாக நியமிக்கப்படவுள்ள பொலிஸ்ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோனின் பெயர் பரிந்துரைக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது.

தேசிய பொலிஸ்ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த 14 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

இந்தநிலையில், புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை, தற்போதுள்ள உறுப்பினர்கள் தமது பதவிகளில் கடமையாற்றுகின்றனர். 19 ஆவது திருத்தச் சட்டத்தின் 41 - ஈ சரத்தின் பிரகாரம் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரை, தற்போதுள்ள உறுப்பினர்கள் தமது பதவிகளில் தொடர அனுமதியுள்ளது.

இந் நிலையிலேயே புதிய பொலிஸ்ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படும் போது முன்னாள் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோனுக்கு பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்.கே. இலங்கக்கோன் இலங்கை பொலிஸ் சேவையில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி முதல் 2016 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வரை 33 ஆவது பொலிஸ்மா அதிபராக கடமையாற்றியவராவார்.

அவரின் ஓய்வை அடுத்தே தற்போதைய பொலிஸ்மா அதிபர் நியமனம் பெற்றிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்த

## சம்பந்தன், சுமந்திரனுக்கு அருகதை இல்லை-சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

ஆயுத போராட்டத்தை கொச்சைப்படுத்த சம்பந்தன், சுமந்திரனுக்கு அருகதை இல்லை என ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுரேஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆயுத போராட் டம் இடம் பெற்றிருக்கக் கூடாது என பாராளுமன்றத்தில் பேசியுள்ளார்.

முன்னர் விடுதலைப் புலிகளது போராட்டத்தை ஆதரித்து பேசியவர் இப்போது அவரது சுருதி மாறியுள்ளது.

தற்போது அரசாங்கத்துடன் பேசுவதாக இருந் தாலும் சரி, ஐ.நா.மனித வுரிமை பேரவையில் பேசு வதாக இருந்தாலும் சரி, சர்வதேசத்துடன் பேசுவதாக இருந்தாலும் சரி விடுதலைப் போராட்டத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் ஏறிநின்றேபேசமுடியும்.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இப் போராட்டத்திற்காக தமது உயிரை தியாகம் செய்துள்ளார்கள். ஆகவே இவர்களது போராட்டத்தைக் கொச்சைப்படுத்த இவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது.

மேலும் இரா.சம்பந்தன் போராட்டம் ஒன்றில் கைது செய்யப்பட்டு பனாங்கொடை முகாமில் தடுத்து வைக்கப்பட்ட போது இனிமேல் இப்படியான போராட்டங்களில் ஈடுபடமாட்டேன் என முதலாவதாக கடிதம் எழுதி கொடுத்துவிட்டு வந்தவர்.

ஆகவே இவர்களுக்கு அகிம்சைப் போராட்ட வரலாறும் இல்லை. ஆயுத போராட்டத்திற்கு அண்மையிலும் இவர்கள் வரவில்லை. இந்நிலையில் இப் போராட்டங்களை கொச்சைப்படுத்த இவர்களுக்கு உரிமை இல்லை.

தமிழ் கைதிகளது விடுதலை தொடர்பில் அரசியல் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும். இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

ஜனாதிபதி மற்றும் பிரதமர் அத்தகைய நிலைக்கு வந்துள்ளார்களா என்பது அடுத்த கேள்வியாகும். இந் நிலையில் இவர்கள் இதனை சட்டப் பிரச்சினையாக பார்க்கின்றார்களே தவிர அரசியல் பிரச்சினையாக பார்க்கவில்லை. குறிப்பாக கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரது கருத்துப்படி பார்க்கும் போது இவர்களும் தமிழ் அரசியல் கைதிகளது விடயத்தை சட்டப் பிரச்சினையாகவே பார்க்கின்றார்கள்.

அவ்வாறாயின் இவர்கள் அவர்களை அரசியல் கைதிகளாக பார்க்காது பயங்கரவாதிகளாகவே பார்க்கின்றார்கள். அவ்வாறு கூட்டமைப்பானது இவர்களை அரசியல் கைதிகளாகவே பார்க்குமாக இருந்தால் இவர்களது விடுதலை தொடர்பில் சட்ட பிரச்சினையாக பார்க்காது அதனை அரசியல் பிரச்சினையாக பார்த்து அவர்களை விடுதலை செய்வது தொடர்பான அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அதனை விடுத்து இவர்கள் செயற்படுவார் களாயின் அது தமிழ்மக்களுக்கு ஆரோக்கியமாக அமையாது என சுரேஸ் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாணவர்கள் சீருடை விவகாரம்; இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆசிரியர் சேவை சங்கம் முறைப்பாடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை துணிகளை இறக்குமதி செய்யும் இந்திய நிறுவனமொன்றுக்கு 2ஆயிரத்து 372 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்படவுள்ளமை தொடர்பில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரத்தை எதிர்த்து நேற்று முன்தினம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் முறைப்பாடொன்றை கையளித்திருந்தது.

இம் முறைப்பாட்டை கையளித்துவிட்டு, அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜயசிங்க .பாடசாலை மாணவர்களுக்கு வழங்கவென இந்திய நிறுவனமொன்றினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாடசாலை சீருடைகளுக்கு வழங்கப்படவுள்ள காசோலை தொடர்பில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் றிசாத் பதியுதீன் கூட்டிணைந்து அமைச்சரவையில் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை போன்று வழங்கப்படவுள்ள காசோலை மோசடியான வகையிலேயே வழங்கப்படவுள்ளது. இது தர மற்ற ஒரு இறக்குமதிக்காக இந் நிறுவனங்களுக்கு வழங்க முற்படுவது இவர்களுக்குள்ளும் இது தொடர்பில் ஏதேனும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக சிந்திக்கத்தூண்டுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மோ.சைக்கிள் விபத்தில் கணவன்-மனைவி படுகாயம்



(சாவகச்சேரி)

கைதடி கோப்பாய் பாலத்தடியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கணவன்-மனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கனரக வாகனங்கள் இரண்டு ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் விபத்துக்குள்ளாகி உள்ளன. இந் நிலையில் கோப்பாய் வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் கனரக வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கைதடி மேற்கைச் சேர்ந்த க.சந்திரன் (வயது-50) மற்றும் அவரது மனைவி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். (இ-30)

## மருந்துவில்லை சிக்கியதில் 5 வயதுச் சிறுவன் பலி

(கொழும்பு)

மருந்து வில்லை தொண்டையில் சிக்கி.ஐந்து வயதுச் சிறுவன் உயிரிழந்த சம்பவமொன்று. கலேவெல நகரில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி இரவு, சிறுவனின் தொண்டையில் மருந்து வில்லை சிக்கியதையடுத்து. உடனடியாக கலேவெல பிரதேச வைத்தியசாலைக்கு பெற்றோர் கொண்டு சென்றுள்ளனர். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளானென பொலிஸார் தெரிவித்தனர்.

கலெவெல- ஜயதிலக்க மாவத்தையைச் சேர்ந்த. மிதும் சனுஜ் கங்கொடவத்த என்ற சிறுவனே. இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் தாய், குறித்த பூச்சி மருந்து வில்லையை, கடந்த 15 ஆம் திகதி இரவு இரு துண்டுகளாக்கி சிறுவனுக்கு பருக கொடுத்த போதே, இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பில், கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

72



யாழ்ப்பாணத்தின் முதலாவது போர்த்துக்கீச ஆளுநர் ஒலிவேறா

"யாழ்ப்பாண இராச்சியம் தமக்குச் சொந்த மாகிய நிலையில் ஒலிவேறா தனது படைகளிற் லரையும், கூலிப் படைகளில் பெரும்பாலா னவர்களையும் கோட்டைக்குத் திரும்பி அனுப்பி விட்டான். குறைந்தபட்சம் 200 போர்த்துக்கீசப் படைகளையும், ஆயிரத்துக்குக் குறைவான சிங்களக் கூலிப் படைகளையும் மட்டுமே அவன் யாழ்ப்பாணத்தில் வைத்திருந்தான்"

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

எல்லாவற்றிற்கும் மேலாகப் போர்த்துக்கீசரை எதிர்த்துப் போரா டுவதற்கு, யாழ்ப்பாண அரசர்கள் பல்வேறு வகைகளில் முயன்று ள்ளார்கள். ஆனால் அவர்களால் கண்டி இராச்சிய மன்னனினதும், படைகளினதும் உதவியைப் போர்த்துக்கீசருக்கு எதிரான போரில் பயன்படுத்த முடியாமற் போனதுடன், ஆயிரக்கணக்கில் சிங்களக் கூலிப்படைகளைப் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண அரசுக்கு எதிரான போரில் பயன்படுத்தியிருக்கின்றனர்.

ஒரு பொது எதிரியை, அந்நிய ஆதிக்கத்தை நாட்டைவிட்டுத் துரத்துவதற்காக யாழ்ப்பாண அரசர்களால் மேற்படி சிங்களக் கூலிப்படைகளைத் தகுந்த முறை யில் கையாளமுடியாமற் போய் விட்டமையும் யாழ்ப்பாண அர சைப் போர்த்துக்கீசர் அழிக்கக் கார ணமாக இருந்தவைகளில் ஒன்றா கும்.

எந்தவொரு இறைமையுள்ள தேசமும், நாட்டுப் பற்றுள்ள, தூர நோக்கம் கொண்ட, எந்தச் சந்தர்ப் பத்திலும் அந்நிய சக்திகளிடம் விலைபோகாத ஒரு தலைவனைக் கொண்டு காணப்படவில்லையோ, அந்தத் தேசம் அந்நியர்களிடம் அடி மையாவது தவிர்க்க முடியாததா கும்.

அதேபோன்று எத்தேசம் ஒரு கட்டுக்கோப்பான, தேசப்பற்றுக் கொண்ட, சொந்த இராணுவத் தைத் தன்னகத்தே கொண்டு காண ப்படவில்லையோ, அத்தேசம் அந்நியர்கள் கையில் அகப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகி ன்றது என்பதனையே யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாறு புகட்டும் பாடமாக அமைகின்றது என்று கூறுவதில் தவறில்லை.

### போர்த்துக்கீசர் ஆட்சியும் அழிவுகளும்

1619ஆம் ஆண்டுடன் யாழ்ப் பாண இராச்சியம் முற்றாகப் போர்த்துக்கீசர் கைக்கு மாறியது டன், யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலி குமார னும், அவனுடைய அரசுரிமை வாரி சுகளும் யாழ்ப்பாண மண்ணி லிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப் பட்டு, கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு, கோவாவிற்கு அனுப் பப்பட்டார்கள்.

"அரச குடும்பம் சம்பந்தப்பட்ட யாவற்றையுமே இங்கிருந்து அப் புறப் படுத்தி விடுவதே மிகச் சிறந்தது."என த ஒலிவேறா விளங் கப்படுத்தினான். இக்கூற்று அவன் யாழ்ப்பாண இராச்சியத்தை அடி யோடு அழித்து விட்டதை உணர்த் துகின்றது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஒலிவேறா முற்றாக ஒழித்துக் கட்டி, தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துவிட்டதாகப் பெரு மிதம் அடைந்த வேளையில், அவ னுக்குச் சில அதிர்ச்சிகளும் காத்தி ருந்தன. 1619 களை அடுத்துவரும் இரண்டாண்டுகளில் தஞ்சாவூர் நாயக்கர்களின் படைகள், உள்ளூர் தமிழர்களுடன் சேர்ந்து போர்த்துக் கீசரை யாழ்ப்பாணத்திலிருந்து அகற்றப் படையெடுத்தமையே அவ் அதிர்ச்சியாகும்.

யாழ்ப்பாண இராச்சியம் தமக்குச் சொந்தமாகிய நிலையில் ஒலிவேறா தனது படைகளிற் பலரையும், கூலிப் படைகளில் பெரும்பாலானவர்க ளையும் கோட்டைக்குத் திரும்பி அனுப்பிவிட்டான். குறைந்தபட்சம் 200 போர்த்துக்கீசப் படைகளையும், ஆயிரத்துக்குக் குறைவான சிங்களக் கூலிப்படைகளையும் மட்டுமே அவன் யாழ்ப்பாணத்தில் வைத்தி ருந்தான்.

ஒலிவேறாவுக்கு பிரதான அனு கூலமாகக் கத்தோலிக்கர்களாக மாற்றப்பட்ட தமிழர் பெரும்பால மாக அவன் பக்கம் நின்றமை, கோட் டையிலிருந்தும், நாகபட்டின த்திலிருந்தும் எந்நேரமும் கடல் மார்க்கமாகக் கிடைக்கூடிய போர்த் துக்கீசப் படையுதவிகளும், வெடி கருவிகளும் கிடைக்கக் கூடியதாக இருந்தமை என்பவற்றின் காரண மாக மேற்படி எதிர்ப்பை அவன் எதிர் கொள்ளும் நிலையில் இருந்தமை என்றே கூறவேண்டும்.

முதலாவது சவாலை 1620 ஒலிவேறா எதிர்நோக்க வேண்டி யிருந்தது. 1619 இல் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தைத் தமதாக்கிக் கொண்ட போது டொம் லூயி (Dom Louis) என்ற தமிழ்க் கிறி ஸ்தவ முதலியார் போர்த்துக்கீசர் தனக்கு வழங்கிய அதிகாரத்தில் அதிருப்தி கொண்டு காணப்பட் டான். இதன் விளைவாக அவன் தஞ்சாவூர் நாயக்கரிடம் சென்று படையுதவி பெற்று, போர்த்துக் கீசரை வெளியேற்ற முனைந்தான். தஞ்சாவூர்ப் படைகளையும், உள் ளூர்த் தமிழர்களையும் உள்ளடக்கிய 3000 படைகளுடன் போர்த்துக் கீசரை எதிர்த்தான்.

சிறிதளவு படைகளை யாழ்ப் பாணத்தில் இருந்த கிறிஸ்தவ ஆலயத்திலும், நல்லூர்க் கோவிலி லும் நிறுத்தியிருந்தான். இந் நிலை மையில் ஒலிவேறாவுக்கு கோட் டையிலிருந்து போர்த்துக்கீசப் படை களும், இலங்கைக் கூலிப்படை களும் உரியநேரத்தில் யாழ்ப்பாண த்துக்கு வந்து சேர்ந்தன.

அந்த வேளையில் நாகபட்டினத்தி லிருந்து ஆயுத விநியோகமும் உரிய நேரத்தில் யாழ்ப்பாணம் வந்தடைந் தது. அதனால் டொம் லூயியின் படை களை முற்றாக ஒழிக்க ஒலி வேறாவுக்கு மிக இலகுவாக இருந் தது. ஆனால் டொம் லூயி தனது முயற்சியை இத்துடன் நிறுத்த வில்லை.

1621 இல் மறுபடியும் தஞ்சா வூர் நாயக்கர்களின் படை உதவியு டனும், உள்ளூர்த் தமிழர்களையும் ஒன்றுசேர்த்து ஒலிவேறா மீது போர் தொடுத்தான். ஆனால் ஒலி வேறா இப் போரிலிருந்து நல்லூருக்குப் பின்வாங்கினான்.

ஏற்கனவே செய்ததுபோன்று, கோட்டையிலிருந்து போர்த்துக் கீசப் படைகளையும், சிங்களக் கூலிப்படைகளையும் அவசரமாக வரவழைத்தான். டொம் லூயியின் படைகளை, நல்லூரிலும், கோப் பாயிலும் வைத்து ஒலிவேறா தோற் கடித்தான்.

மேலும், தஞ்சாவூரிலிருந்து துணைப்படைகள் டொம் லூயியி னால் வரவழைக்கப்பட்டன. அச்சு வேலியில் 11 மாசி 1621 இல் இரு பகுதியினரும் போரில் ஈடுபட்ட னர். அப்போரிலும் டொம் லூயி யின் படைகள் ஒலிவேறாவின் படைகளால் தோற்கடிக்கப்பட்டன.

இத்துடன் போர்த்துக்கீசரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளி யேற்றும் டொம் லூயியின் முயற்சி யும், தஞ்சாவூர் நாயக்கர்களின் முயற்சியும் கைவிடப்பட்டன. மேற்படி சம்பவத்தின் பின்னர் யாழ்ப் பாணப் பிரதேசத்தில் போர்த்துக்கீ சர் எதுவித எதிர்ப்புமின்றி 1628 வரை ஆட்சிசெய்தனர்.

இக் காலப்பகுதியில் ஒலி வேறா, எல்லா வகையிலும் மேலா ண்மை செலுத்தும் ஒரு தளபதியாகக் காணப்பட்டான். பல நூற்றாண்டு களாக நல்லூரிலிருந்த தமிழர்களின் இராசதானியை ஒலிவேறா 1621 இல் யாழ்ப்பாணத்துக்கு மாற்றினான்.

எதிரிகளின் போர் நடவடிக்கை யைத் தடுப்பதற்கும், தலைமை யகத்துடன் தொடர்பு வைத்திருப் பதற்கும் தேவை ஏற்படும் போது உதவிப் படைகளைப் பெறுவதற் கும் கடலுக்கு அண்மித்த யாழ்ப் பாண நகர் நல்லூரரை விட முக் கியத்துவம் வாய்ந்து காணப்பட்டது.

மூகல் பெரேரா ஊர்காவற்றுறை யில் கோட்டை ஒன்றைக் கட்டிய போதும், யாழ்ப்பாணமே தலை நகரமாக இருந்தது. யாழ்ப்பாண த்தில் ஒரு பிரதான கோட்டையின் அவசியத்தை உணர்ந்த போர்த்துக் கீசர் 1624 இல் கோட்டை கட்ட ஆரம்பித்தனர். ஆனால் 1632 வரை அக் கோட்டை கட்டும் வேலை பூரணமாக்கப்படவில்லை என அறியமுடிகிறது.கோட்டை இராச் சியம் ஏற்கனவே போர்த்துக்கீசர் வசமாகிவிட்டது என மேலே கூறப் பட்டது. 1617களில் கண்டி மன்ன னுடன் போர்த்துக்கீசர் செய்த சமா தான உடன் படிக்கையின் படி, அங்கு தற்காலிக அமைதி நிலவியது.


(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

### கதை

# கடவுளின் உதவி



ஓட்டப் பந்தயத்தில் பங்கு கொள்ள ஆசைப்பட்ட ஓர் இளைஞன் கடவுளிடம் சென்று தனக்கு உதவும்படி வேண்டினான். அவன் எதிர்பாராத விதமாக கடவுள் அவன் முன் தோன்றினார். 'நான் உன் வேண்டுதலை ஏற்றுக் கொள்கிறேன். உன்னையறியாமலே நான் ஓட்டப் பந்தயம் நடைபெறும் இடத்துக்கு வந்து உனக்கு உதவுகிறேன். நீ கேட்டுக் கொண்டபடி முதலாம் இடத்தைப் பெற வைக்கிறேன்' என்றார்.

அவனது கோரிக்கையில் இரக்கம் கொண்ட கடவுள் போட்டி நடக்க இருந்த தினத்தில் அவனுக்கு எந்தவிதத்திலும் உடல் ஆரோக்கியம் குறையாதிருக்கும்படி அவனது சக்தி பல மடங்காகப் பெருகவும் செய்தார். மேலும் அவனுக்கு ஏதாவது இடையூறு ஏற்படாதிருக்க நேரில் பார்த்து உதவும் நோக்கில் போட்டி நடைபெற ஏற்பாடாகியிருந்த இடத்திற்குச் சென்றார். பார்வையாளர்களுள் ஒருவராக நின்று இவனை நோக்கிய வண்ணமிருந்தார்.

போட்டி ஆரம்பிக்க போட்டியாளர்கள் அனைவரையும் அழைத்தபோது இவனும் சென்றதைப் பார்வையாளர்களுள் ஒருவராக நின்ற கடவுள் கவனித்தார். அவன் நல்ல ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் இருக்கிறான். அவனது வெற்றி நிச்சயமானது என்ற எதிர்பார்ப்புடன் அனைவருடனும் சேர்ந்து கடவுளும் உற்சாக மூட்டினார்.

போட்டி ஆரம்பமானது. மின்னல் வேகத்தில் ஓடிய் போட்டியாளர்களில் முன்னே செல்வது தன்னிடம் வேண்டுதல் செய்தவனே என்ற நம்பிக்கையுடன் அவனை நோக்கினார் கடவுள்.

ஆனால் அது அவனில்லை. இரண்டாமவனை நோக்கினார். அவனும் இல்லை. இப்படியே தேடிய போது ஓடிக் கொண்டிருக்கும் ஒருவரும் அவனாக இல்லை. திகைத்துப்போன கடவுள் போட்டியின் ஆரம்ப இடத்தை நோக்கினார்.

அங்கு அவன் சிரித்துக் கொண்டு நின்றிருந்தான். ஏன் இவன் இவ்வாறு செய்கிறான். என்று புரியாமல் குழப்பமுற்றார் கடவுள். வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டார்கள்.

சிரித்துக் கொண்டு போட்டி ஆரம்ப இடத்தில் நின்றவன் அப்போது தான் வியர்க்க விறுவிறுக்க ஓடினான். ஓடு தடத்தில் அல்ல. கோயிலை நோக்கி ஓடினான். அங்கு கடவுள் தன்னை ஏமாற்றி விட்டதாகப் புலம்பினான்.

### கதை கூறும் கதை

இவர்களைக் போன்றவர்களுக்காக கடவுள் இறங்கி வந்தும் பயன்?

எம்மில் பலரும் கடவுளை வணங்கும்போது வெவ்வேறு வேண்டுதல் செய்யலாம் என்ற தெளிவு இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

கடவுள் அவனுக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறார். எனக்கு மட்டும் இப்படி ஏன் ஓரவஞ்சனை செய்கிறார் என்று கவலைப்படுபவர்கள் இருக்கிறார்கள்.

ஓடு தடத்தில் ஓட ஆரம்பித்தவனுக்குத் தானே வேகத்தைக் கூட்டிக் கடவுளால் உதவ முடியும். நின்றுகொண்டிருப்பவனை வேகமாக நகர்த்தி முதலாம் இடம் பெற வைத்தால் அது மாயாஜாலம் ஆகிவிடும். ஓட்டப் பந்தயமாக இருக்க முடியாது.

நீங்கள் ஓடும் போது கடவுள் உங்களை விழாது பார்த்துக்கொள்ளலாம். ஆனால் உங்களுக்காக நீங்களே தான் ஓட வேண்டும்.

''முயற்சி செய்யாது வென்றவரும் இல்லை. முயன்று தோற்றவரும் இல்லை. முயற்சியும் அதற்கான பயிற்சியும் உயர்ச்சிக்கான வழியில் எம்மை இட்டுச்செல்லும். வாழ்வு மலர்ச்சி பெற்று இனிதாகும்''

## சக்தி வழிபாடு

• நவராத்திரி என்பது ஒன்பது இரவுகள் சிறப்பாகச் சக்தியைக் கொண்டாடி வழிபாடு செய்யும் விழாவாகும்.

• சிவனுக்கு ஒரு இராத்திரி. சக்திக்கு ஒன்பது இராத்திரி.

• இவ்விழா புரட்டாதி மாத அமாவாசையை அடுத்து வருகின்ற பிரதமை முதலாக நவமி வரை உள்ள 9 இரவுகள் கொண்டாடப்படுகின்றது. எனவே தான் நவராத்திரி எனப்படுகின்றது.

• 10 ஆவது நாள் வெற்றி விழாவாக விஜய தசமி கொண்டாடப்படுவதால் தசஇரா என்றும் சிலர் கூறுவர்.

• என்றும் எதிலும் எமக்கு சக்தி வேண்டும். அச்சக்தியை முதல் மூன்று நாட்களும் வீரத்திற்காக துர்க்கையை வேண்டி வழிபடுவோம். அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும் இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியையும் வழிபடுவோம்.

• 10 ஆம் நாள் விஜய தசமி விழா அன்று மகிடா சரவதம் நடைபெற்று இதற்கு சான்றாக ஆலயங்களில் கன்னி வாழை வெட்டி வெற்றி விழா கொண்டாடப்படும். அன்றைய தினம் ஒவ்வொருவரும் தாம் விரும்பி கலையை ஆரம்பிக்கும் சிறப்பு நாளாகக் கொண்டாடி மகிழ்வர்.

• முப்பெரும் தேவியரின் அளப்பரிய சக்தியை அற்ப சக்தி உடையவளாகிய சிறியோனாகிய நான் கூற முற்படுவது நகைப்பிற்குரியதல்லவா?

• ''மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய் ஆதாரம் உன்னையல்லால் யாரெமக்கும் பாரினிலே'' என துர்க்கையையும் "பொன்னரசி நாரணார் தேவி புகழரசி மின்னு நவரத்தினம் போல் மேனி அழகுடையால்'' என இலக்குமியையும் ''வாணி கலைத்தெய்வம் மணிவாக்கு உதவிடுவாள் ஆணி முத்தைப் போல அறிவு முத்து மாலையினால்'' என சரஸ்வதியையும் பாரதியார் கூறியது போல

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்''

ரா.ராகவி, தரம் 3 ஏ, யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

## ஒரு பழைய கதிரையின் சுயசரிதை

நானும் எனது நண்பியும் பாடசாலை இடைவேளை நேரத்தின் போது நீரருந்துவதற்காக தண்ணீர்க் குழாயடிக்குச் சென்று கொண்டிருந்தோம். கலகலத்தபடி சென்ற எம் காதுகளில் சிறு விசும்பல் ஒலி வந்து மோதியது. யார் விசும்புவது? என நாம் இருவரும் சுற்றும் முற்றும் எம் கண்களை சுழல விட்டோம்.

எமது வகுப்பறையின் மாடிப்படிகளின் கீழே இருந்தே விசும்பல் வருகின்றது என்பதை நாம் கண்டு பிடித்து அங்கே சென்றோம். அங்கே பழைய உடைந்த தளபாடங்கள் இடத்தை அடைத்தபடி காணப்பட்டன. இவை தூசி நிறைந்து காணப்பட்டதுடன் சிலந்தி வலைகளால் போர்த்தப்பட்டும் இருந்தன.

அதற்குள் இருந்த ஒரு கதிரையே விசும்பிக் கொண்டிருந்தது. சிலந்தி வலைகளை விலக்கியபடி கதிரையின் அருகில் சென்றோம். அருகில் சென்று பார்த்த போது தான் அக் கதிரையின் கால் ஒன்று உடைந்திருந்தது என்று புரிந்தது. நாம் அக் கதிரையிடம் ஏன் அழுகிறீர்கள்? என்று கேட்டோம். அதற்கு அக்கதிரை என் கதையை சொல்கிறேன் ஆறுதலாய்க் கேளுங்கள் குழந்தைகளே என்று கூறி தன் கதையை கூறத் தொடங்கியது.

சின்னஞ்சிறு மழலைகள் துள்ளித் திரிந்து மகிழ்வுடன் கல்வி பயிலும் இப் பாடசாலைக்கு நானும் என் நூறு தோழர்களும் சுமார் 3 வருடங்களுக்கு முன் புத்தம் புதிய கதிரைகளாக வந்திறங்கினோம். நாம் தளபாடக் கடையில் பல நண்பர்களாகக் கூடி மகிழ்ந்தோம். அந் நண்பர்கள் பலரை பிரிந்து வந்த சோகம் முதலில் என்னை வாட்டியது. எனினும் சின்னஞ் சிறு சிறார்களின் கலகலப்பில் அந்த சோகம் கொஞ்சம் கொஞ்சமாய் மறையத் தொடங்கியது. நான் ஆண்டு ஒன்று வகுப்பில் கொண்டு சேர்க்கப்பட்டேன்.

அந்த வகுப்பறைச் சூழல் ரம்மியமாக இருந்தது. மழலைக் குரலில் ஆடிப்பாடும் சிறுவர்களுடன் நானும் என்னை மகிழ்வுடன் இணைத்துக் கொண்டேன். அவர்கள் என்னில் உட்காரும் போதெல்லாம் பூக்குவியல்களை சுமக்கும் உணர்வு என்னுள் தோன்றியது. ஆடலும் பாடலுமாய் இனிமையுடன் சென்ற காலமதில் கலைவிழா ஒன்றிற்காய் கதிரைகள் தேவை என்று எம்மை ஓர் மண்டபத்திற்கு எடுத்துச் சென்றனர்.

அங்கு சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்படையும் சந்தர்ப்பம் பெற்றேன். எனினும் மீண்டும் எனது இருப்பிடம் திரும்பும் வழியில் கீழே தவற விடப்பட்ட எனக்கு பலத்த வலி தோன்றியது. என்னை மீண்டும் தூக்கிய போது தான் தெரிந்தது எனது கால் ஒன்று உடைந்துள்ளது என்று.

''கால் உடைந்துவிட்டது இனி இந்தக் கதிரை பாவிக்க முடியாது. தூக்கி மூலையில் போடு'' என ஒருவர் சொன்னது எனக்கு பலத்த அதிர்ச்சியை அளித்தது. அதன்படி இம் மூலையில் .போட்டுச் சென்று விட்டனர். அன்றில் இருந்து இம் மூலையில் எதற்கும் பிரயோசனம் அற்று இருப்பதை நினைத்தும் மழலைகளை பிரிந்த துயரத்தாலுமே அழுகிறேன் என்றது கதிரை. அதே சமயம் இடைவேளை முடிந்த மணி ஒலிக்க நாம் கதிரையிடம் விடை பெற்றுக் கொண்டு கனத்த மனத்துடன் வகுப்பறையை அடைந்தோம்.

சி.நர்த்தவி, யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்

# கேதார கௌரி நோன்பின் மகத்துவம்



கைங்கிரியின் சிகரத்தில் உமா சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவ சபையை ஏற்படுத்தி அதில் வீற்றிருக்கின்றார். அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியொடு விசித்திர விகட நாடகமொன்றை ஆடிக்காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கின்றார். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள்.

பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கின்றார். பரமசிவனின் அனுக்கிரகமும் பிருங்கிக்கு கிடைக்கின்றது. அதனைக் கண்டு சபையோர் பிருங்கி மகரிஷியை பாராட்டுகின்றனர். அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியுடன் பார்வதி தேவியை நீக்கி பரமசிவனை வலம் வந்து வணங்குகிறார்.

அதனால் பார்வதிதேவி கவலையடைந்தாள். இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் தேவி சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முத்தி நிலையை விரும்பி நிற்பவர். அதனை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனம் இல்லையென்ற திடசித்தம் கொண்டார். அதனால் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார் என்று பார்வதிக்கு விளக்கினார்.

பார்வதிதேவி வருத்தப்பட்டு பரமசிவனுடன் கோபம் கொள்கிறார். கோபாவேசத்தில் தனது சக்தியின் கூறு பிருங்கி மகரிஷியின்றும் அகலக் கடவது என்று கூறிவிடுகின்றார். பிருங்கி மகரிஷியின் உதிரம் பிழிந்து சக்கையாகிறது. அவர் நிற்பதற்கு முடியாது தள்ளாடுகிறார். அப்பொழுது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கிறார். பிருங்கி தண்டின் உதவியுடன் போய்ச் சேருகிறார்.

தேவிக்கு மேலும் கோபமுண்டாகிறது. கயிலையை விட்டு நீங்கி பூலோகத்திற்கு வருகிறார். வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கும் பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறார். அந்த இடத்தில் 12 வருடங்கள் மழையின்றிக் கிடந்த விருட்சங்கள் எல்லாம் தளிர்த்து பூத்து மணம் வீசுவதைக்கண்டு அதிசயிக்கின்றனர்.

தேவி தாங்கள் கயிலையை விட்டு பூலோகத்திற்கு எழுந்தருள காரணம் என்னவெனக் கேட்டுவிடுகின்றார். தேவி தான் பூலோகத்திற்கு வந்த கதையைச் சொல்கிறார். தேவியும் ஆச்சிரமத்திற்குச் சென்று வால்மீகி மகரிஷி தேவிக்கென அமைத்து கொடுத்த ஆச்சிரமத்தில் நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து மகரிஷியே! பூலோகத்தில் நான் விரதமொன்று அனுஷ்டிக்க வேண்டும். இருக்குமானால் அதனை எனக்கு கூறுங்கள் என்றார்.

மகரிஷி தாயே! தாங்கள் விரத முகத்தோடு எழுந்தருளியிருக்கின்றீர்கள். அதை விடவா பூலோகத்தில் சிறந்த விரதமொன்று உண்டு எனக் கூற தேவி புன்னகைத்து தன் விரதத்தினை ஆல விருட்சத்தின் கீழ் அமர்ந்து ஆரம்பிக்கின்றார். மண்ணிலே லிங்கம் பிடித்து ஈஸ்வரனாக பாவித்து பூஜை செய்கின்றார். 21 நாள் பூஜை நிகழ்கின்றது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்ல உருண்டை, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை நைவேத்தியமாக வைத்து தூபம் காட்டி வணங்குகின்றார். 21 இழை எடுத்து தரித்து 21 முடி முடிந்து ஈஸ்வரனை தியானம் செய்து காப்பு கட்டுகின்றார். காப்பு அணிந்ததும் பரமசிவன் பார்வதிக்கு காட்சி கொடுத்து தேவி உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்கின்றார்.

தேவி ஈசனைப் பார்த்து உமது தேகத்தில் பாதி எனக்கருள வேண்டுமென்று கேட்கின்றார். ஆகட்டும் என்கிறார் ஈஸ்வரன். என்னை நோன்பு நோற்று வரம் பெற்று உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுஷ்டிக்கின்றார்களோ அவர்கள் உன்மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவர் என்று வரமும் நல்கி பரமேஸ்வரன் பார்வதி சமேதராய் அர்த்த நாரீஸ்வரர் வடிவத்தோடு கயிலயங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து பூலோக வாசிகளால் கௌரி நோன்பு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த கௌரி நோன்பை அனுஷ்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர். இந்த விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை சங்கல்பம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை, வலம் வருதல் என்பனவாகும்.

எனவே இவற்றை ஒவ்வொருவரும் தாமாகவே செய்து விரதத்தினை நிறைவேற்றுதல் விரும்பத்தக்கது. விரும்பினால் அவரவரது இல்லங்களிலும் இதனை செய்துகொள்ளலாம். ஆனால் புனிதமானசூழ்நிலை அமைய வேண்டும்.

இலிங்கத்தின் அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்து பூஜை செய்தல் மேலானது. 21 நாட்கள் இவ்விரதத்தினை அனுஷ்டிக்க முடியாதவர்கள் இறுதி நாளில் எல்லாப் பூஜையும் முடித்து கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்பதே முக்கியமானதாகும்.

**கலாபூஷணம்,**
**க.லோகேஸ்வரன்**
**தொல்புரத்தூர்.**

## மின் குமிழ்கள் பொருத்தல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு தரை வட்டாரத்தில் இரண்டாம் கட்டமாக மின்குமிழ்கள் பொருத்தும் பணிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வட்டார உறுப்பினர் உதயசந்தர் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது இரண்டாம் கட்டமாக 8மின்குமிழ்கள் வட்டார பகுதிகளில் பொருத்தப்பட்டன.

முதற்கட்டமாக 6 மின்குமிழ்கள் பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பழுதடைந்த மின்குமிழ்களும் மிக விரைவில் மாற்றப்படும் என வட்டார உறுப்பினர் உதயசந்தர் தெரிவித்துள்ளார். (இ-30)

# நாடாளுமன்றத்தில் தான் அதிக உணவு வீண் விரயம்

### ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**எமது நாட்டில் அதிகமாக உணவு வீண் விரயம் செய்யப்படும் இடம் பாராளுமன்றமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலக ஆகார தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

எமது நாட்டில் உணவுகளை அதிகமாக வீணாக்கும் இடம் பாராளுமன்றமாகும். இது நாம் அனைவரும் அறிந்த விடயம். சில எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் இல்லை. சிலர் இருந்தாலும் பாராளுமன்ற உணவை சாப்பிடுவதில்லை. பாராளுமன்றத்தில் ஒவ்வொரு நாளும் பாரியளவிலான உணவுகள் தேங்கிக் கிடக்கின்றன.

நான் கடந்த 27 வருடங்களாக பாராளுமன்றத்தில் இருந்ததனாலும், தற்போதும் போய் வருவதனாலும் இது குறித்து நன்கு அறிந்து வைத்துள்ளேன் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (இ-7)

# இடைக்கால அரசு குறித்து சு.க.மத்திய செயற்குழுவில் அதிகம் பேசப்படவில்லை

### ஷான் விஜேலால் தகவல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் இடைக்கால அரசாங்கம் குறித்த விடயங்கள் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் தெரிவித்தார். அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 15 கட்சி உறுப்பினர்களின் இடைக்கால அரசாங்கம் குறித்த கோரிக்கை கடிதம் வாசிக்கப்பட்டது. பின்னர், அதனை ஆவணப் பதிவில் பாதுகாப்பாக வைக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். அவ்வளவு தான் அது தொடர்பில் நேற்று முன்தினம் கூட்டத்தில் இடைக்கால அரசாங்கம் தொடர்பில் பேசுவதற்கு எடுக்கப்பட்ட நேரம்.

இரண்டுமணிநேரமாக நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கட்சியைப் பலப்படுத்துவதற்கு முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகவும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஞானசார தேரருக்காக கண்ணீர் சிந்திய தேரர்

(கொழும்பு)

ஞானசார தேரருக்கு சலுகைகள் வழங்குவதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறது என ராவணபலய அமைப்பின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் சட்டம் ஒருதலைபட்சமாகவே செயற்படுகின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கும் வழங்கப்படுகின்ற சலுகைகள் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு வழங்குவதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறது என அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தானந்தே சுகத தேரர் தெரிவித்தார்.

ஞானசாரரது விடுதலை தொடர்பில் கடந்த காலங்களில் நாங்கள் பாரிய முயற்சிகளை மேற்கொண்டோம்.

ஆனால் அவற்றில் எவ்விதமான தீர்வும் இதுவரையில் எட்டப்படவில்லை. ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார்.

பொதுபல சேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



யாழ் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய சர்வதேச முதியோர் தின நிகழ்வில் தலைவர் முதியோர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் டென்மார்க்கிலிருந்து வருகை தந்த ஆர்வலர் நடேசலிங்கம் தம்பதியினர் மங்கல விளக்கேற்றுவதையும் உப தலைவர் சிறுவர்களுக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

கடந்த காலத்தை ஆராயலாம்; போற்றலாம். ஆனால் நமது கண்கள் எப்போதும் முன்னோக்கிப் பாய வேண்டும். – யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மக்களிடம் ஆவலை ஏற்படுத்தியுள்ள தமிழ் மக்கள் பேரவையின் அறிவிப்பு

எதிர்வரும் 24ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தன் எதிர்கால அரசியல் நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவிக்கவுள்ளதாக தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு ஈழம் என்ற எல்லை கடந்து உலகம் முழுவதிலும் வாழுகின்ற ஈழத் தமிழ் மக்களையும் ஈழத் தமிழர்கள் தொடர்பில் அக்கறை கொண்ட தமிழர்களிடமும் பலத்த எதிர்பார்ப்பையும் ஆவலையும் ஏற்படுத்தியுள்ளது.

இம்மாதம் 25ஆம் திகதியுடன் வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வருகிறது.

இதற்கு முன்பாக எதிர்வரும் 23ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் சம்பிரதாயபூர்வமான அமர்வு நடைபெறும்.

அன்றைய நாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் பிறந்தநாள் என்று அவைத் தலைவர் அறிவித்துள்ளார்.

முத்லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பிறந்தநாளில் சம்பிரதாயபூர்வமான அவை அமர்வு நடந்து முடிய,

மறுநாள் 24ஆம் திகதி அதாவது வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவுறுவதற்கு முதல் நாள், முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களுக்கு விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார்.

இந்த அறிவிப்பு அவரின் எதிர்கால அரசியல் தொடர்பானது எனத் தமிழ் மக்கள் பேரவை தனது செய்திக் குறிப்பில் பதிவு செய்துள்ளது.

தவிர, தமிழர்களின் அபிலாசைகளை வென்றெடுப்பது தொடர்பில் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த ஆதரவைத் திரட்டுவதும் இது விடயத்தில் தமிழ் மக்கள் பேரவையின் வகிபாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றித் தீர்மானிப்பதற்குமாக,

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மாபெரும் கூட்டமொன்றுக்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் எதிர்கால அரசியல் நிலைப்பாடு என்ன? என்ற கேள்வியின் துளைப்போடு காத்திருந்த இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இப்போது முதலமைச்சரின் அறிவிப்பை நோக்கிக் காத்திருக்கத் தயாராகி விட்டனர்.

இதற்காக நல்லூர் முருகன் ஆலயத்தின் வடக்கு வீதியில்; தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்த வரலாற்றுப் பெருமை மிக்க மண்ணில்; தமிழ் மன்னன் சங்கிலியன் அரண்மனை அமைத்து ஆட்சி செய்த நல்லூர் இராசதானியில் தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடுவர் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு தமிழர் தாயகம் முழுவதிலும் இருந்து தமிழ் மக்கள் கூடுவது தனித்து முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அறிவிப்பை கேட்பதற்காக மட்டுமல்ல,

மாறாக நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு தமிழ் மக்களாகிய நாங்கள் பக்கபலமாகவும் பாதுகாப்புக் கேடயமாகவும் இருக்கிறோம்.

நீங்கள் நேர்மையின் வழியில் ஜனநாயகத்தின் துணைகொண்டு அகிம்சையையும் ஆத்மிகத்தையும் படைக்கலமாக்கி சர்வதேசத்தின் துணையோடு எங்களின் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்பதற்காகவும் தமிழ் மக்கள் அங்கு கூடுவர் என்பது இங்கு குறித்துரைக்கக்கூடிய விடயமாகும்.

# இழப்பீடு; காணாமல் போனோரின் உறவுகள் அனுபவித்த துன்பங்களை நிவர்த்தி செய்யாது

## - சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

"நாட்டில் காணாமல் போதல் இடம்பெறவில்லை என்றும் அவ்வாறான சம்பவங்கள் பிரச்சினைக்குரியவை அல்ல எனவும் கூறுபவர்களைப் புறக்கணிக்க வேண்டும்" என காணாமல் போனோர் அலுவலகத் தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற காணாமல் போனோர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில்காணாமல்போதல மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெற்றுள்ளன என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வதுடன், அவ்வாறான சம்பவங்களால் கரணாமல் போனோரின் உறவினர்கள் எதிர்கொண்டுள்ள துன்பத்தை உணர்ந்துகொள்ள வேணடும். அத்தோடு இவ்வாறான சம்பவங்கள் இனி நிகழாது என்பதனையும் உறுதி செய்ய வேண்டும்

காணாமல் போனோர் அலுவலகத்தின் பரிந்துரைகளுக்கமைய காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவதன் மூலம் அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டு தமக்கான நீதியினைக் கோரக் கூடாது என்பது பொருளல்ல.

இழப்பீடு வழங்குவதன் மூலம் காணாமல்போனோர தொடர்பான உண்மையினைத் தெரிந்து கொள்வதற்கான உரிமை ஒருபோதும் மறுக்கப்படாது.

அதேவேளை இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில உண்மையினைத் தெரிந்து கொள்ளல், நீதியினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் இழப்பீடு வழங்குதல் போன்ற எதுவித நடவடிக்கைகளாலும் காணாமல்போனோரின் உறவினர்கள் அனுபவித்த துன்பங்களை நிவர்த்தி செய்ய முடியாது.

இதுவரையில் எமது அலுவலகம் முன்னெடுத்து வந்திருந்த மக்கள் சந்திப்புக்களின் தொடர்ச்சியாக இம்முறை கொழும்பில் மக்கள் சந்திப்பினை ஏற்பாடு செய்துள்ளோம்.

அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் காணாமல்போனோரின் உறவினர்களுக்கு விளக்கமளிப்பதுடன், உறவினர்கள் எமது அலுவலகத்திடமிருந்து எதனை எதிர்பார்க்கின்றனர் என அறிந்து கொள்வதே இம்மக் கள் சந்திப்புக்களின் பிரதான நோக்கமாக உள்ளது.

காணாமல் போனோர் அலுவலகம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட முடியும். எனினும் காணாமல் போனோரின் உறவினர்களின் தேவை எது வென்பதற்கே நாம் முக்கியத்துவம் அளிக்கின்றோம்.

இழப்பீடுகளை வழங்குவதற்கான அலுவலகம் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன. காணாமல் போனோரின் உறவினர்களுக்கான இழப்பீடுகளைப பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை அதன்மூலம் மேற்கொள்ளப்படும்.

இழப்பீட்டு அலுவலகத்தினால் நியாயமான இழப்பீடு வழங்கப்படுவதனை உறுதி செய்வதுடன், எதிர்காலத்தில் அவ்வலுவலகத்துடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் அரசாங்கத்தினால் அமைக்கப்படுகின்ற ஆணைக்குழுக்கள் மீதான நம்பிக்கையீனம் பரவலாகக் காணப்படுகின்றது. குறிப்பாக வடக்கில் காணாமல் போனோர் அலுவலகம் மீது நம்பிக்கையற்ற நிலை வெகுவாகக் காணப்படுகின்றது. இந்த அலுவலகம் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள போதிலும் சுயாதீன ஆணைக்குழுவாகவே செயற்பட்டு வருகின்றோம்.

அலுவலகத்திற்கான கட்டடத்தொகுதியினைப் பெற்றுக் கொள்ளல், ஊழியர்களை பணிக்கமர்த்தல், விசாரணை அதிகாரிகளை நியமித்தல் உட்பட அலுவலகத்தை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அத்தோடு எதிர்வரும் மாதங்களில் காணாமல் போனோர் அலுவலகத்திற்கான 12 பிரதேச அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளது. அவற்றில் 5 பிரதேச அலுவலகங்கள் வடக்கு மாகாணத்தின் முக்கிய பிராந்தியங்களில் அமைக்கப்படவுள்ளன. மேலும் காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளோம்.

பரிந்துரையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் செயற்படுத்தப்படுவதன் ஊடாக அதனைக்கொண்டு மாத்திரம் காணாமல்போனோரின் உறவினர்கள் திருப்தியடைய வேண்டும் என நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்களது உறவினர்கள் தொடர்பான உண்மையினை அறிந்துகொள்ளும்உரிமையினை நாம் உறுதி செய்துள்ளதுடன், அவர்களது துன்பத்தை எதனைக் கொண்டும் ஈடு செய்ய முடியாது என்பதனையும் உணர்ந்துள்ளோம்." என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நவராத்திரி பாமாலை

கல்விக்கு இன்று நான்காம் நாள்



நவராத்திரி

அறிவுச் செல்வம் தந்திடுவாள்
எங்கள் அன்னை சரஸ்வதி
அகிலத்தின் பொருள் செல்வம் தருவாள்
எங்கள் இலட்சுமி
அன்பு, துணிவு, ஆற்றல் தருவாள்
எங்கள் துர்க்கையே
அறிவும் ஆற்றலும் நன்மனம் இருந்தால்
வாழ்க்கை வெற்றியே

சி.அருண்
யா/ வடலியடைப்பு சைவப்பிரகாசா வித்தியாசாலை, பண்டத்தரிப்பு

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் உற்சவ கால அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 15.10.2018 அன்று அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கை வங்கியின் நல்லூர்க்கிளை முகாமையாளர் தங்கராஜா சுதாகரன் விருந்தினராகக் கலந்து கொண்டார். வெற்றி பெற்ற அதிர்ஷ்ட இலக்கங்கள் பின்வருமாறு,

முதலாம் பரிசு-64585,
இரண்டாம் பரிசு-10024,
மூன்றாம் பரிசு-19165

**ஆறுதல் பரிசுகள**

01) 48417, 02)48837, 03) 23429, 04) 71844, 05) 54356

வெற்றிபெற்றோர்தங்களிடமுள்ள அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு 15.11.2018 இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் தங்களது அதிர்ஷ்ட 'இலாபச் சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். (இ)



## சத்திய தரிசனம்

### உயர்ந்த சிந்தனை வேண்டும்

❖ பிரார்த்தனை உதட்டளவில் நில்லாமல் இதயத்திலிருந்து வரவேண்டும். தாயை நாடும் குழந்தை போல், இறைவனை உனது மனம் நாடட்டும்.

❖ சத்தியத்தைப் பேசுவதுடன் தர்மத்துக்கு கட்டுப்பட்டும் வாழ வேண்டும். இதுவே வாழ்க்கையில் முழு பலன்களை அடைய வழி.

❖ இறைவனை எப்படி வேண்டுமானாலும் அணுகலாம். அன்பு கனிந்த இதயப்பூர்வமான பக்தியின் மூலமாக அவரை எளிதில் நெருங்கி விடலாம்.

❖ இறைவன் அன்பு வடிவமானவர் என்பதால் அவரை அடைய விரும்புபவர்கள் உண்மையைச் சார்ந்து நடக்க வேண்டும்.

❖ நாம் அன்புடன் செய்யும் சேவை தூய்மையானதாக இருக்க வேண்டும். அளவில் அதிகமாக இருப்பதைக் காட்டிலும் தன்மையில் உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

❖ உயர்ந்த எண்ணங்களை மனிதன் நினைக்க வேண்டும் என்பதற்காக மனிதப் பிறவியை இறைவன் கொடுத்து உள்ளான் என்பதை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள்.

❖ நற்பண்புகள் உள்ளவனின் வாழ்க்கை சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

## மின் தடை

(மன்னார்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமை ப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக நாளைவெள்ளிக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில புதுகாமம், அச்சங்குளம், எருவிட்டான், அறுகுகுன்று, அளவக்கை, மாவி லங் கேணி, செம்மண்தீவு Ware House, வாழ்க்கை பட்டான் கண்டல், பல்லங்கோட்டை, பண்டாரிகுளம், நானாட் டான ஆகிய பிரதேசத்திலும் மின் தடைப்படும். (இ-9)

# கௌதமன் சிறப்பாட்டம் அரையிறுதியில் றேஞ்சஸ்

இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கம் 5 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தும் வடமாகாண ரீதியிலான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் புங்குடுதீவு நசரத் அணியினை எதிர்த்து றேஞ்சஸ் அணி மோதியது. ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய றேஞ்சஸ் அணி 5 ஆவது நிமிடத்தில் கௌதமனின் சிறப்பான பந்து பரிமாற் றத்தின் மூலம் ஆர்த்திகன்முதலாவதுகோலை பதிவு செய்தார். பதிலுக்கு 6 ஆவது நிமிடத்தில் நசரத் அணியினர் தமது முதலாவது கோலை பதிவு செய்ய விறுவிறுப்பானது ஆட்டம். சளைக்காத றேஞ்சஸ் அணியினர் 7 ஆவது நிமிடத்தில் மீண்டும் கௌதமனின் சிறப்பான பந்து பரிமாற் றத்தின் மூலம் 2 ஆவது கோல் பதிவானது. பின்னர் 16 ஆவது நிமிடத்தில்கைலாஸ் 3 ஆவது கோலை தமது அணிக்காக பெற்றுக் கொடுக்க முடிவுக்கு வந்தது முதல் பாதியாட்டம். இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பத்தில் இரு அணிகளும் வெற்றிக்காக போராடினர். சளைக்காத றேஞ்சஸ் அணியினர் 43 ஆவது நிமிடத்தில் வர்மன் 4 ஆவது கோலை போட 47 ஆவது நிமிடத்தில் நசரத் அணியினர் தமது 2 ஆவது கோலை போட்டனர். 53 ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை கௌதமன் உதைக்க நேர்த்தியான முறையில் கைலாஸ் கோலாக மாற்ற முடிவுக்கு வந்தது ஆட்டம். இறுதியில் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது றேஞ்சஸ் அணி. (க)

## யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டக் கொண்டாட்டம்

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டக் கொண் டாட்டம் - 2018 எனும் தொனிப் பொருளிலான உதைபந்தாட்டத் தொடர் அரியாலை கால் பந்தாட்ட பயிற்சி மைதா னத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றைய போட்டியில் மாலை 3.45 மணிக்கு வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதவுள் ளதுடன் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் மற்றுமொரு போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## பிரான்ஸ் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உதைபந்தாட்டம்

பிரான்ஸ் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில், வலிகாமம் லீக் ஒழுங்கமைந்து நடத்த வுள்ள கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை 19 ஆம் திகதி முதல் ஆரம்பமா கவுள்ளது.

19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானங்களில் இந்தச் சுற்றுப் போட்டியானது நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வடமாகாணம்தழுவிய வகையில் 24 அணிகள் பங்குபற்றுகின் றன. வழமையாக இந்தச் சுற்றுப் போட்டியினை யாழ்ப் பாணம் லீக் ஒழுங்கமைத்து நடத்தி வந்தது. இம்முறை யாழ்ப்பாண லீக் 75 ஆவது ஆண்டுநிறைவையொட்டிய கால்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளை நடத்துகின்றமையால், நடத்தும் பொறுப்பு வலிகாமம் லீக்கிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளதுடன், இந்தச் சுற் றுப்போட்டியில்யாழ்ப்பாண லீக்கின்அணிகளும் பங்கு பற்றமாட்டாது.

அந்தவகையில், மன்னார், வவுனியா, தீவகம், முல்லைத்தீவு, வலிகாமம், வடமராட்சி மற்றும் பருத்தித்துறை லீக்குகளைச் சேர்ந்த அணிகள் இம்முறை சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி சம் பியனாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-26)

# யாழ்.லீக்கின் உதைபந்தாட்டம் சென்.நீக்கிலஸ் அணிகள் வெற்றி



யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக் கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி லீக்கின் ஏற்பாட்டில் கால் பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரி யாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில் ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப் படுகின்றன. இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப் போட்டியானது நடத்தப்படுகின்றது.

இதில் ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் லீக் முறையில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது. இதில் சென்.நீக்கிலஸ்அணி. 02:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26-106)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்



2018 இற்கான இலங்கை தேசிய ரீதியின் 43 ஆவது கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 13, 14 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் 11 வயதுப் பிரிவில் பங்குபற்றிய சென். ஜோண்ஸ் கல்லூரி மாணவன் விஜயராஜ் தமிழ் நிலவன் காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார். (க)

## றிபேக் தாரகை வெற்றிக் கிண்ணம்; சம்பியனாகியது சாவகச்சேரி சி.ஆர்.சி.

றிபேக்தாரகை விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி CRC விளையாட்டுக்கழகம் சாம் பியன் ஆகியது.இறுதிப்போட்டிக்கு தெரிவான இரு அணிகளுக்கும் தலா 5000/= ரூபா பணப்பரிசில் பாராளுமன்ற உறுப்பினர் கே என் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார். கேடயங்களும் வழங்கப்பட்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கண்ணகை விளையாட்டுக்கழகம் லகுசாந்தின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்கமுடியமல் 37 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது. பதிலளித்தாடிய CRC சாகித்தியனின் அபார ஆட்டத் தின் மூலம் 5 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்ட நாயகனாக சாகித்தியனும் தொடர்நாயகனாக கீதனும் சிறந்த பந்து வீச்சாளராக லகுசாந்தும். அதிக சிக்சர் அடித்த வீரனாக டர்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-29)




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரின் 2 ஆவது காலிறுதி ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியினை எதிர்த்து திக்கம் அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

# அமரர் பவசிங் ஞாபகார்த்த ஸ்கோர் போட் திறப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்ட கிரிக்கெட் வீரரும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யாழ்.மாவட்ட பாடசாலைகள் அணி, லங்கா சீமெண்ட், கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் கிரிக்கெட் வீரரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளரும் கொக்குவில்மத்திய சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவருமான அமரர் வீரசிங்கம் பவசிங் ஞாபகார்த்தமாக லண்டன், கனடாவில் வசிக்கும் அவரின் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவ நண்பர்களின் அனுசரணையுடன் கொக்குவில் இந்துக் கல்லூரி நிறுவப்பட்ட ஸ்கோர்போட் எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு திருமதி கமலாம்பிகை பவசிங்கினால் திறந்து வைக்கப்படவுள்ளது. நிகழ்வின் இறுதியில் விசேட நிகழ்வாக கே.சி.சி.சி. அணியினை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் அணிகள் மோதும் இருபது-20 கிரிக்கெட் போட்டி நடைபெறும். (க)

## குற்றமிழைத்த இராணு...

சகலரையும் கூட்டாக தூக்கிலிடுவோம் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "இன்று உங்களுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் சுதந்திரம் கிடைக்கவில்லையா?, ஜனநாயகமும், உங்கள் உரிமையும் கிடைக்கவில்லையா?, இன்று நீங்கள் பிரதமரையும், ஜனாதிபதியையும் கடுமையாக விமர்ச்சிக்கின்றீர்கள் உங்களுக்கு ஏதேனும் நடந்ததா?

உங்கள் லசந்த எங்கே? நாம் லசந்த கொலையாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டாமா? எங்களை சிறைக்குள் தள்ள முயற்சிப்பதாக மகிந்த கூறுகிறார். அவர் ஏன் அதனைப் பொறுப்பேற்கிறார்.

நாம் லசந்தவைக் கொன்றவர்களைத் தான் சிறைக்குள் தள்ள இருக்கிறோம். லசந்த, எக்நெலிகொட, கீத் நொயார் ஆகியோரே எங்களுக்கு தேர்தலில் வாக்குகளைக் கொண்டு சேர்த்தவர்கள்.

நாம் தாஜுதீன் கொலையாளிகளை தூக்குமேடைக்கு அனுப்புவோம். அதேபோல் லசந்த கொலையாளிகளையும், தூக்குமேடை ஏற்றுவோம். பிரகீத் எக்நெலியகொடவைக் கடத்தியவர்களை மொத்தமாக அவர்கள், இராணுவத்தின் எந்த தரத்திலிருந்தாலும் தூக்குமேடை ஏற்றுவோம். அந்த பிள்ளைகள் 11 பேரைக் கொன்றவர்களையும் தூக்கிலிடுவோம்.

கீத் நொயார், பாலசூரிய, போத்தல ஜயந்த, உபாலி தென்னகோன், ஆகியோரைத் தாக்கியவர்களை நாம் சிறையிலடைப்போம். அன்று சிரச ஊடகநிறுவனம், சியத்த ஊடக நிறுவனத்திற்கு தீ வைத்தனர். இன்று அவ்வாறான நிலைமை இல்லை என கூறினார். (ம)

## பொது மக்களின்...

கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் கீழ் இலங்கை கடற்படை பொறுப்பிலிருந்த மன்னார், முள்ளிக்குளத்தில் அமைந்துள்ள 23 ஏக்கரும் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள 53 ஏக்கர் நிலப்பரப்பும் இலங்கை இராணுவத்தின் 224ஆவது படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள திருகோணமலை தோப்பூரில் 3 ஏக்கர் காணியையும் ஆரம்ப உரிமையாளரிடம் விடுவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்தப் பிரதேசங்களில் குடியமர்த்தப்படவுள்ள பொதுமக்களுக்கு தமது வாழ்வாதாரத்தை நிலையான வகையில் முன்னெடுக்கக் கூடிய வகையில் அடையாளம் காணப்பட்டுள்ள மூன்று குளங்களை சீர்செய்து அந்தப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்து அவற்றை ஆரம்ப உரிமையாளரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

இதற்கமைவாக தற்பொழுது முப்படையினரால் பயன்படுத்தப்படும் காணியை விடுவிக்கக் கூடிய வகையில் இவற்றை புனரமைப்பதற்கும் அந்தப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் தேவையான நிதி வழங்குவதற்காகவும் மீள் குடியமர்வு புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துக் கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த வகையில் மன்னாரில் 23 ஏக்கர் காணியும், முல்லைத்தீவில் 53 ஏக்கர் காணியும், திருகோணமலையில் 3 ஏக்கர் காணியும் விடுவிக்கப்படுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதி மைத்திரி...

றுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த உரையாடலின் போது இந்திய பிரதமர் மோடி எதிர்காலத்தில் இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

இதன்போது இரு நாட்டு தலைவர்களும் நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், தற்போது இலங்கையில் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

அத்தோடு இலங்கையின் சுபீட்சத்திற்கும் அபிவிருத்திக்கும் தேவையான அனைத்து வித உதவிகளையும் வழங்குவதாக இந்திய பிரதமர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நட்புறவு தொடர்ந்தும் வலுவுடன் காணப்படுமென் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளதோடு. அயல்நாடுகளுடனும் ஏனைய உலக நாடுகளுடனும் நட்புறவையும் நெருக்கமான தொடர்புகளையும் பேணி பாதுகாப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் இந்திய பிரதமர் தெரிவித்தார்.

நெருங்கிய நண்பனாகவும் அயல்நாடு என்ற வகையிலும் இலங்கையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெறும் ஒத்துழைப்புகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது பாராட்டினார். (ம)

## ஜனாதிபதியுடனான...

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று சந்தித்து உரையாடினார்கள். இப்பேச்சுவார்த்தையின் போது கூறப்பட்ட விடயங்கள் பின்வருமாறு,

1.அரசியல் கைதிகளின் விடயம் சட்ட ரீதியாக மாத்திரம் பார்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல. இது தமிழ் தேசிய பிரச்சினையுடன் தொடர்புடைய விடயம். ஆதலால் இது அரசியல் ரீதியாக எதிர்நோக்கப்பட வேண்டும். இதுவரையில் இது அரசியல் ரீதியாக அணுகப்பட்டிருக்கவில்லை. அரசியல் ரீதியாக அணுகப்படவேண்டும் என நாம் வலியுறுத்தினோம்

2.யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்து விட்டன. யுத்தம் முடிவடைந்தவுடன் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. அரசியல் கைதிகள் நீண்டகாலமாக சிறையில் இருக்கிறார்கள். அவர்களை தொடர்ந்து சிறையில் தடுத்து வைத்திருப்பது மனிதாபிமானமற்றது. அவர்களுக்கு எதிராக தாமதம் இல்லாமல் தண்டனை வழங்கியிருந்தால் தற்போது தண்டனைக்காலம் நிறைவேறி வெளியே வந்திருப்பார்கள்.

3.இவர்கள் அனைவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு பலருக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலமே அவர்களுக்கெதிரான சாட்சியமாக இருக்கிறது. இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு புதிய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. இப்புதிய சட்டத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சாட்சியமாக முடியாது.இந்த சூழலில் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

4.1971ஆம் ஆண்டும் 88,89ஆம் ஆண்டுகளிலும் மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்தவர்கள் அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடிய பலர் விடுவிக்கப்பட்டார்கள். யுத்தம் முடிவடைந்த பின்பு முன்னைய அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடிய 12 ஆயிரம் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். ஆகையால் இந்த கைதிகளை தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பது நியாயமற்றது. அவர்களும் விடுவிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

5.சிறைக்கைதிகள் சிறையில் உண்ணாவிரதம் இருந்து போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். எமது வேண்டுகோளுக்கு இணங்க அந்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியுள்ளார்கள். பொது அமைப்புக்களும், மக்களும், பல்கலைக்கழக மாணவர்களும் பலவித போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இவையெல்லாம் தமிழ் மக்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கின்றன.

6.தமிழ் மக்களின் கருத்து, கைதிகள் தமிழர்களாக இருக்கிற காரணத்தினால்தான், அரசு போதிய அக்கறை செலுத்தாமல் இருக்கிறது என்பதாகும்.இது நல்லிணக்கதிற்கு பாதகமானது என்பதனையும் நாம் வலியுறுத்தினோம்.

இவை அனைத்தையும் கேட்டு ஜனாதிபதி, வருகிற வாரம் பிரதம மந்திரி, சட்டமா அதிபர், மற்றும் தேவையான அனைவரையும் அழைத்து இந்த விடயத்தை சாதகமாக அணுகிகைதிகளின் விடுதலையை எவ்விதமான முறையில் நிறைவேற்றலாம் என்பதை முடிவு செய்வதாக தெரிவித்தார்

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் வைத்தியர் எஸ்.சிவமோகன் மற்றும் கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம)

## அரசியல் கைதிகளு...

பிரதமருடன் கலந்துரையாடினேன்.

மேலும் தற்போதுள்ள நூற்றுக் கணக்கானோருக்கும் சட்டரீதியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அத்துடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களில் எத்தனை பேரை விடுவிக்கலாம் என்றும் நாம் கலந்துரையாடினோம், இதில் கதிர்காமரை கொலை செய்தோரும் உள்ளதாகவும் அவர்களை விடுதலை செய்வது சாத்தியமில்லை எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

அத்துடன் மிக பாரதூரமற்ற வழக்குகளும உள்ளன, ஆகவே அவ்வாறுள்ள அனைவரது விடயங்களும் தீர்க்கப்பட்டுள்ளதுடன் மேலும் 102 பேரது வழக்குகள் தொடர்பிலேயே தீர்மானிக்கப்படவுள்ளன, ஆகவே அவை தொடர்பில் பி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் யாருக்கு பொது மன்னிப்பு அளிப்பது யாருக்கு தண்டனை அளிப்பது என்பது குறித்தே தற்போது கலந்துரையாடி வருகின்றோம் என்றார். (ம)

## திருநெல்வேலியில்...

திருநெல்வேலி கிழக்கை சேர்ந்த யேசுதாசன் நிமல்ராஜ் (வயது 48) என்ற நபரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனிமையில் வசித்து வந்துள்ளார். இவரை கடந்த சனிக்கிழமையே அயலவர்கள் கண்டுள்ளனர். நேற்று முன்தினம் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக அயலவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அந்த இடத்துக்கு வந்த பொலிஸார் வீட்டை சோதனை செய்தபோது அங்கு உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டுள்ளது. சடலத்தை மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான பிரேத பரிசோதனையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## 23ஆம் திகதி இறுதி...

இசையமைத்துள்ளார்.

"வட மாகாணம் எங்களின் வளர்தாயகம இங்கு வாழும் எமக்கு அது அறிவாலயம்" என்றவாறு மேற்படி கீதம் ஆரம்பிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## றோ சதித்திட்டம் தீட்டிய...

சரவை கூட்டத்தின் போது இந்தியாவின் றோ உளவுத்துறை நிறுவனம் தன்னை கொலை செய்ய முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாக இந்தியாவின் "த ஹிந்து" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் தெரிவித்திருப்பது வருமாறு,

கடந்த 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்திய புலனாய்வு சேவையொன்றுடன் தொடர்புபடுத்தி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாக வெளியிடப்பட்ட உள்ளூர் மற்றும் ஊடக செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதியை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சதி முயற்சியில் இந்திய உளவுத்துறையின் எந்தவொரு ஈடுபாடு குறித்தும் ஜனாதிபதி இதன்போது கருத்துத்தெரிவிக்கவில்லை என்பதை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெளிவுபடுத்த விரும்புகின்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குறித்த அமைச்சரவைக்கூட்டத்தில், ஜனாதிபதியை படுகொலை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கும் சதித்திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. படுகொலை சதி முயற்சி தொடர்பில் விரிவான விசாரணையொன்று நடத்தப்படவேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இக்கூட்டத்தில் வலியுறுத்தியுனார்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட ஏனைய விடயங்களுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலும் உள்ளடங்குகின்றது. இதன்போது தேசிய பொருளாதாரத்தின் நன்மைக்கு இலங்கை, ஆழ் கடல் துறைமுக முனையம் ஒன்றினை கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

தற்போதுள்ள அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் இந்தியாவும் இலங்கையும் மிக நெருங்கிய நல்லுறவையும் ஒத்துழைப்பையும் பேணிவருகின்றன. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு காரணமாக அமையும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு உயர்மட்ட விஜயங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்திய உயர்ஸ்தானிகர் நேற்று காலை ஜனாதிபதியை சந்தித்தபோது இதனுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டதுடன் இருதரப்பு உறவுகளும் உறுதிப்படுத்தப்பட்டன என்பதை ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட விரும்புகிறது.

இந்த சூழ்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையில் இருந்து வரும் நல்லுறவுகளுக்கும் இரு தலைவர்களுக்கும் இடையிலான சிறந்த தனிப்பட்ட தொடர்புகளுக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் சில உள்நோக்கம் கொண்ட தரப்புகளால் இத்தகைய திரிபுபடுத்தப்பட்ட விடயங்கள் பரப்பப்படுதல் மிகவும் கவலைக்குரியதாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

(முன்னர் கிடைத்த செய்திகள் உள்ளே...)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 17-10-2018
சீட்டிழுப்பு இலக்கம் 883
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 3 9 9 1 0 1

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.10.17
சீட்டிழுப்பு இலக்கம் 1915
ஆங்கில எழுத்து: R
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 15 25 26 70

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 17/10/2018
சீட்டிழுப்பு இலக்கம் 293
வெற்றி எழுத்து: E
சுப்பர் இலக்க: 21
வெற்றி இலக்கங்கள்: 03 25 32 34

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2018-10-17
சீட்டிழுப்பு இலக்கம் 63
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 23 35 64 77

தேசிய லொத்தர் சபை

## குடும்பஸ்தர்...

இச் சம்பவத்தில் மாக்கிரான், துன்னாலை வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான மகாரத்தினம் கணேஸ்வரன் (வயது-57) என்பவரே மரணமடைந்தவராவார்.

நேற்று பிற்பகல் வயல் பார்ப்பதற்காக சென்றதாகவும் பின்னர் வயல் வரம்பில் மயங்கிய நிலையில் காணப்பட்டதையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் மரணமடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைக்காகவும், உடற் கூற்றுப் பரிசோதனைக்காகவும் சடலம் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-60)


அமெரிக்க அதிஸ்ட விசா- நீங்களும் அதிஸ்டசாலியாகலாம்!

இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்

55000 இலவச விசாக்கள்

0768226243

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற 60 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

நான் A/L எடுத்துக்கொண்டிருக்கும்போதே பதிவு செய்துவிட்டேன் பெறுபேறுகள் வரவும் விசா வரவும் சரியாக இருந்தது.இப்போது அமெரிக்காவில் எனது வாழ்க்கை நான் எதிர்பார்த்த விதத்தில் அமையக்கூடியதாக இருந்தது.V2 TRAVELS க்கு நன்றிகள்.

2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



யோகேஸ்வரன் - சுவிந்திரன்

அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை

V2 TRAVELS

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

B.A II[nd] - Year (200 Level)

பேராதனை பல்கலைக்கழகம் வெளிவாரி

மேற்படி 2018ஆம் ஆண்டு B.A 1ஆம் ஆண்டிற்கான பரீட்சை எழுதிய மாணவர்கட்கான 2ஆம் ஆண்டுக்குரிய விரிவுரைகள்

ஆரம்பம் :- 20.10.2018 (காலை 8 மணி)

குறிப்பு: 2017ஆம் ஆண்டு 1ஆம் ஆண்டு பரீட்சை எழுதிய மாணவர்கட்கான பரீட்சை முடிவுகள் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை முடிவுகளை பல்கலைக்கழக இணையத்தளத்தினுள் பார்வையிடமுடியும்.

விபரங்களுக்கு S.அருள்நங்கை (நிர்வாகி)

T.P: No - 021 222 8148 / 077 846 9721

புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-4171)



கட்டார் வேலைவாய்ப்பு

எலக்ரீஷியன், பிளம்பர், மெக்கானிக், டிரைவர், A/C டெக்னீஷியன், Waiter, Office Boy/Girls

Emerald Isle Manpower & Travel Services

The Sri Lankan Recruitment Specialists

License No. 2268

ஆரம்பக் கட்டணம் இல்லை

077 00 38 215 / 021 221 9 221

www.emeraldisle.lk

email: jaffna@emeraldisle.lk

(C-4159)

221-1/1, மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்



விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து- 700 /=Kg

(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

(C-4120)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## யாழில் அமைக்க...

விருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிர சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி புதிய தொழில் வாய்ப் புக்கான சந்தர்ப்பம் மற்றும் வருமான வழியை ஏற்படுத்தி வடக்கு பிரதேசத்தில் நிலையான அபிவிருத் தியை மேற்கொள் வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக ஏற்றுமதி சந்தையில்ஈடுபடக்கூடிய வகையில் தொழில் சேவை திட்டங்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் மிகவும் இலகுவாகவும் பயனுள்ள வகையிலும் தமது அலுவலகங்களை பயனுள்ள வகையில் அமைத்துக்கொள்ளக் கூடிய வகையில் தேவையான சேவைகளை வழங்குவதற்காக புதிய தொழில் முயற் சியாளர்களை ஊக்குவிக்கும் மத்திய நிலையம் ஒன்று இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அமைக்கப் படவுள்ளது. (ம)


FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03.11.18 சனி 8 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 0762 669 614 ஆரம்பம் :05.11.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(C-4108)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: 0763836129

நிறஞ்சன் நகைமாடம் சந்தை வீதி, உடுப்பிட்டி.



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



Gift your child, the best preschool of where learning make fun!

LITTLE CHUTTYS' MONTESSORI

Home Away From Home

2019 புதிய ஆண்டு ஆரம்பம்

விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

2+ வயது முதல்

Features:-

- Exercises for Practical Life
- Developing Fine & Gross Motor Skills
- Social interactions
- Art & Craft
- Educational Videos & Audios
- Elocution Trainings
- Day Care Facilities
- Annual Concerts & Sports Days



நாளை 19.10.2018 வெள்ளிக்கிழமை வித்தியாரம்ப நிகழ்வு (ஏடு தொடக்கல்) மு.ப.9.00 மணி முதல் மு.ப.10.00 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

Medium of Instruction Tamil & English

Completely managed under montessori concept with sensorials designed by Dr. Maria Montessori

Transport Facility also available



No.05 & 23/2, Brodie Front Lane, Kandy Road, Ariyalai Jaffna.

021 222 7020 | 077 920 8116 | f Little Chuttys' Montessori



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

இந்தியன் செலக்ஷனின்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



தீபாவளி விசேட தள்ளுபடி

15000/- பெறுமதியான பட்டுச்சாறி ஒன்றிற்கு 5000/- பெறுமதியான சாறி ஒன்று இலவசம்

15% - 50% வரை விலைக்கழிவு

| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | ~~1500/-~~ | 1000/- |
| டெனிம் டொப் (Top) | ~~1500/-~~ | 1000/- |
| 2 in 1 சல்வார் துணி | ~~1500/-~~ | 1000/- |
| 3 in 1 சல்வார் துணி | ~~2000/-~~ | 1500/- |
| கொட்டன் சல்வார் | ~~4000/-~~ | 2000/- |
| நெற் சல்வார் பெரியது | ~~5000/-~~ | 2000/- |
| நெற் சல்வார் சிறியது | ~~3500/-~~ | 1000/- |

1000/- ரூபாவிற்கு 3 லெகீன்ஸ்



கொட்டன் Top, டெனிம் Top, மொடன்Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரோக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்

15000/- இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய சுவர் கடிகாரம் இலவசம்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்

காலம் : இன்று தொடக்கம் 06.11.2018 வரை

(C-4165)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.